
சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

1995-2005

# திருமறைத்தீபம்



10

ஆண்டு விழா

ஆசிரியர்.ஆர்.பாலா

# பத்தாவது ஆண்டு மலர்

பத்து வருடங்களைக் கண்டுவிட்டது திருமறைத்தீபம். அதை நினைவு கூரு முகமாக இந்த இதழ் பத்தாண்டு நிறைவு மலராக வெளிவருகின்றது. பத்திரிகையின் வளர்ச்சியில் ஊக்கம் காட்டிப் பங்கெடுத்து வருபவர்களை இந்தப் பக்கங்களில் நீங்கள் பார்க்கலாம். நம்மையே நாம் பெருமை பாராட்டிக் கொள்வதற்காக இதை நாம் வெளியிடவில்லை. கண்களில் படாமல் பின்னால் இருந்து பணிபுரிகிற அநேகரை ஒரு தடவையாவது வெளிச்சத்தில் நிறுத்தி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகவே இந்த நினைவு மலர் வெளிவருகிறது.

சர்வ வல்லவரான கர்த்தர் தம்முடைய அளப்பரிய கிருபையால் தரமான கிறிஸ்தவ காலாண்டு பத்திரிகையை தமிழினத்திற்கு வழங்க நம்மை இந்நாள் மட்டும் வழிநடத்தி வந்திருக்கிறார். பிள்ளைப் பருவத்தைக் கடந்து வளர்ந்திருக்கிறது திருறைத்தீபம். இதற்குப் பாலூட்டி, அருஞ்சுவை உணவூட்டி, நல்லாடை உடுத்தி இதன் வளர்ச்சியில் அக்கறைகாட்டி தாயின் பாசத்துடன் தொடர்ந்து உழைத்து வரும் ஒரு கூட்டமே இருக்கின்றது. ஆசிரியரும், அவர் பணிபுரியும் சபையும் இதற்கு அடித்தளமென்றால் இந்தக் கட்டிடம் வளர தன் பங்குக்கு செங்கல் வைத்து இதன் வளர்ச்சியில் அக்கறை காட்டி உழைக்கிறவர்கள் அநேகர். கர்த்தரே இப்பணிக்கு ஊன்றுகோல்.

நான் எழுதுவதையும், மொழி பெயர்ப்பதையும் சரிபார்த்து பல வருடங்களாக துணை புரிந்துள்ளார் என் மனைவி. இன்று அந்தப் பொறுப்பைச் சுமந்து வருகிறார், சென்னையில் எடிட்டராக ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் சகோதரன் ஜேம்ஸ், பத்திரிகையை அருமையாக அச்சிட்டு நேரம் தவறாமல் அனுப்பிவருகிறார்கள் டிராவு பிரிண்ட் அச்சகத்தார். ஸ்ரீ லங்காவில் பத்திரிகையை அச்சிட்டு விநியோகித்து வருகிறார்கள் கிருபை இலக்கிய சேவையைச் சேர்ந்த சகோதர்கள் அருள்செல்வமும், மில்டனும். எம்மோடு இணைந்துழைக்கும் அநேக திருச்சபைகள் இவ்விதழ் தொடர்ந்து வெளிவரத் துணை புரிகிறார்கள். அவசியமேற்படுகிற வேளையில் தேவையான ஆக்கங்களை எழுதிப் பணிபுரிகிறார்கள் என் அருமை நண்பர்களான போதகர்கள். பத்திரிகையின் நடைமுறைத் தேவைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி வருகிறார்கள் சவரின் கிறேஸ் சபை அங்கத்தவர்கள். பத்திரிகை வழங்கிவரும் வேத போதனைகளால் ஆத்மீக ஒளி பெற்று சத்தியத்தில் அக்கறைகாட்டி பத்திரிகைக்கு ஆதரவு அளித்துவருகிறார்கள் வாசக நண்பர்கள். ஜெபங்களில் எம்மைத் தாங்கி நெகேமியாவின் ஈட்டிபோல் இருந்து வரும் அன்புள்ளங்களும் அநேகம். இப்படி இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. திருமறைத் தீபத்தின் வளர்ச்சிக்காக அக்கறையோடு உழைத்து வரும் அனைவருக்கும் பத்திரிகையின் சார்பாக என் மனமார்ந்த நன்றிகள்.

1995ல் நண்பரொருவரின் வீட்டு அறையில் என்னோடு சேர்த்து மூன்று விசுவாசிகளின் உள்ளத்தில் எழுந்த சத்திய வாஞ்சையின் வார்ப்பே திருமறைத்தீபம். ஒரு சிறு முயற்சியாக சவரின் கிறேஸ் சபையைச் சார்ந்த சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் 1995ல் முந்நூறு பிரதிகளோடு மட்டும் உதயமான திருமறைத்தீபம் சீர்திருத்த வேத போதனைகளை தமிழினத்திற்கு அறிமுகப்படுத்துவதையும், அதன் அடிப்படையில்

போதகர்களும் திருச்சபைகளும் வளரத் துணைச் செய்வதையும் இலக்காகக் கொண்டு உழைத்து வருகின்றது. இன்று இருபது நாடுகளில் திருமறைத்தீபம் பவணி வருகின்றது. இந்நாள்வரை இதன் வளர்ச்சிக்குத் துணை புரிந்த கர்த்தர் தொடர்ந்தும் வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு பாதம் பதித்து நடந்து வருகிறது திருறைத்தீபம்.

திருமறைத்தீபத்தை அச்சிட ஆரம்பித்தபோது யாரிடம் அச்சிடுவது என்ற கேள்வி எழுந்தது. கர்த்தரே ஒரு நிறுவனத்திடம் எம்மை வழிநடத்தினார். தொடர்ந்து பத்து ஆண்டுகளாக கடமைக்காக எதையும் செய்யாது, அக்கறையோடு நமது பணிகளுக்கு முதலிடம் கொடுத்து பத்திரிகையை அச்சிட்டு வருகிறார்கள் 'டிராவு பிரின்ட்' அச்சகத் தார். இந்த சிறப்பிதழின் வர்ணப் பக்கங்களையும் பணமே வாங்காது அச்சிட்டுத் தந்திருக்கிறார்கள். நண்பர் ஜோன் ஃபிரிக்கர் (John Fricker) அங்கே நமது பணிகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். பத்து ஆண்டுகளாக எந்தவித தடங்கலும் இல்லாமல் சகல பணிகளையும் பொறுப்போடு செய்து உதவி வருகிறார்.

விடியும் வேளையில் பகலவனின் பார்வைபட்டு மறையும் பனித்துளிகளாய்ப் பறந்து விட்டன பத்து ஆண்டுகள். திருறைத்தீபம் எத்தனையோ இதயங்களில் சீர்திருத்தத் தீயைப் பற்ற வைத்திருக்கிறது என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. அந்தத் தீ கொழுந்துவிட்டு எரியும் இதயங்களும் அநேகம். இருண்டு போயிருக்கிற தமிழினத்தின் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒளியேற்றிவைக்கப் பாடுபட்டு வரும் திருமறைத்தீபம் அதில் வெற்றி கண்டிருக்கிறதா என்பதற்கு காலம்தான் சாட்சி சொல்ல வேண்டும்.

இயேசுவைத் தேவனாக ஏற்றுக்கொண்டு இரண்டாங்கெட்டான் வாழ்க்கை வாழ்ந்து வரும் திருச்சபைகளையும், கிறிஸ்தவ சமுதாயத்தையும் அசைத்து மெய்யான விசுவாசத்திற்கு அடையாளம் அவருடைய வார்த்தைக்கு அடிமைப்பட்டு அனைத்துக் கடமைகளையும் செய்வதே என்பதை பகிரங்கமாக அறிவித்து வருகிறது திருறைத்தீபம். கிறிஸ்தவ சமுதாயத்தில் எல்லோருக்கும் துதிபாடி, சபைப் பிரிவுகளை யெல்லாம் தாஜா செய்து, கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து பிரபலமான பத்திரிகை என்று பெயர் வாங்குவதை நாம் என்றுமே இலட்சியமாகக் கொண்டிருக்கவில்லை. சத்தியத்தை வெளிப்படையாக போதிப்பதையும், நடைமுறை யில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுவதையும் வெட்கப்படுகிற காரியமாக நாம் எண்ணவில்லை. "கொள்கைகளையும், கோட்பாடுகளையும் வெளிப்படையாக எடுத்துக் கூறாத பத்திரிகை ஓர் இலக்கியத் தடங்கல்" என்ற பிரசங்கிகளின் இளவரசனாம் ஸ்பர்ஜன் சொன்ன வார்த்தைகள் எங்கள் காதில் தொடர்ந்து ரீங்காரமிட்டு வருகின்றன. தமிழினத்தில் சத்தியத்தின் அடிப்படையில் சீர்திருத்தம் ஏற்பட்டு சபைகள் வளர வேண்டும் என்ற வாஞ்சையோடு தொடர்ந்து உழைத்து வருகிறோம்.

ஆற்றவேண்டிய பணிகள் மலை போல் நம்முன் எழுந்து நிற்கின்றன. போக வேண்டிய வழியும் இடறலானது; நீண்டது. இதுவரை இருந்ததைவிடப் பொறுமையும், துணிவும், தன்னம்பிக்கையும் நமக்குத் தேவை. முன்வைத்த காலைப் பின்வைக்காமல் தொடர்ந்து சீர்திருத்தப் பாதையில் கர்த்தர் நம்மை வழிநடத்திச் செல்லட்டும். நம்மெல் லோரையும் ஒன்றுகூட்டி இலட்சிய வாஞ்சையோடு சீர்திருத்த கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்காகவும், எழுச்சிக்காகவும் பயன்படுத்தி வரும் இராஜாதி இராஜனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு இந்தப் பத்தாவது ஆண்டு நிறைவு மலரை சமர்ப்பிக்கிறேன். வருகிற காலங்களிலும் நாம் ஏற்றுக் கொண்டுள்ள இலட்சியத்தை மறக்காது கர்த்தரின் மகிமைக்காக உழைக்க கிறிஸ்து இயேசு நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

- ஆசிரியர்

# பத்தாண்டு காலத் தமிழ் கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சி

*கடந்த பத்தாண்டு காலத்தில் தமிழில் கிறிஸ்தவ இலக்கியம் எந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைக் கணிப்பதே இந்த ஆக்கத்தின் நோக்கம். கிறிஸ்தவ இலக்கியம் என்று கூறும்போது கிறிஸ்தவ இலக்கியமாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டு தமிழில் வெளிவரும் எல்லாக் குப்பைகளையும் நாம் கருத்தில் கொள்ளவில்லை.*

### கிறிஸ்தவ இலக்கியம்

*'கிறிஸ்தவ இலக்கியம்' என்ற வார்த்தைகளின் பொருளை முதலில் விளக்குவது அவசியமாகிறது. இதில் 'கிறிஸ்தவம்' என்று நாம் குறிப்பிடுவது ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தவிர்த்த புரொட்டஸ்தாந்து பிரிவினரை மட்டுமே. ரோமன் கத்தோலிக்க மதம் கிறிஸ்தவமல்ல. அது கிறிஸ்தவத்தின் பெயரில் உலாவரும் போலிச் சமயம். இது தமிழினத்தில் இன்று அநேகர் புரிந்துகொள்ளாத உண்மையாக இருக்கிறது. சமீபத்தில் போப் இரண்டாம் ஜோன் போலின் மரண சடங்கின்போது நியூசிலாந்தின் கத்தோலிக்க குரு ஒருவர் பின்வருமாறு கத்தோலிக்க மதத்தை புரொட்டஸ்தாந்து மதத்திலிருந்து பிரித்துக் காட்டினார்: "கத்தோலிக்க மதம் புரொட்டஸ்தாந்து மதத்தைப் போல வார்த்தையை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது சடங்குகளை அடிப்படையாகக் கொண்டது. இதுவே இரண்டையும் பிரிக்கும் முக்கியமான அடிப்படை வேறுபாடு" என்றார். இது எத்தனை பெரிய உண்மை. கத்தோலிக்க மதம் வேதத்தை ஒரு சாட்டுக்காக கையில் வைத்திருந்தாலும் அது வேதத்தின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை. சடங்குகளில் மட்டுமே அது மனிதனின் இரட்சிப்புக்காகவும், அத்தனை ஆத்மீகக் காரியங்களுக்காகவும் தங்கியிருக்கிறது.*

*புரொட்டஸ்தாந்து பிரிவினர் என்று குறிப்பிடும் போது அதிலும் சில பிரிவினர் பாரம்பரிய சபைகளாக ஆத்மீகத்தை இழந்து உயிரிழந்து நிற்கின்றன. உதாரணத்திற்கு தமிழினத்தில் ஆங்கிலிக்கன், சீ. எஸ். ஐ, மெத்தடிஸ்ட், லூதரன் சபைகளைக் கூறலாம். இவைகளின் மத்தியில் ஒரு சில குறிப்பிட்ட தனி நபர்களும், சபைகளும் வேதத்தை நம்பினாலும் மேலிருந்து அடிமட்டம் வரை இந்தப் பாரம்பரிய சபைகளின் தலைமைத்துவம் சத்தியத்தைவிட்டு விலகிப்போயிருப்பதால் அவற்றையும் ஒதுக்குவது அவசியமாகிறது. அடுத்த இடத்தில் இருப்பது பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கம். இது வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் இடம்கொடுத்து வேதத்தை நிராகரித்து இயங்கி வருவதால் வேத அடிப்படையில் அமைந்த இயக்கமாக இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களுடைய எழுத்துக்களில் பெரும்பாலும் சத்தியத்துக்கு இடமிருக்காது. ஆக, மிஞ்சி நிற்பது சுவிசேஷக்*

கோட்பாடுகளைப் (Evangelical) பின்பற்றுகிறவர்கள் மட்டுமே. இவற்றில் சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றும் பிரிவினர், பாப்திஸ்து பிரிவினர், சகோதரத்துவ சபைகள், சுவிசேஷ சபைகளாக இயங்கி வரும் கெரிஸ்மெடிக் அல்லாத தனிச் சபைகள் என்று பல பிரிவினரை அடக்கலாம். இன்று கிறிஸ்தவம் என்ற பெயரில் தமிழினத்தில் உலவுகின்ற அத்தனை பிரிவு களையும் மெய்க் கிறிஸ்தவத்தைப் பிரதிபலிக்கும் பிரிவுகளாக ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது; அப்படி அவற்றை உடனடியாக அங்கீகரிப் பதும் தவறு. ஆகவே, வேதத்திற்கு மதிப்புக் கொடுத்து அதன் அதிகாரத் திற்குக் கட்டுப்பட்டு நடந்து, ஜீவனுள்ள சபைகளாக இருந்து வருகின்ற, இருக்க முயற்சி செய்கின்ற சுவிசேஷ சபைப்பிரிவுகளையும், விசுவாசிகளை யுமே நாம் கிறிஸ்தவம் என்ற பெயரில் இனங்காணுகிறோம்.

அடுத்ததாக, 'இலக்கியம்' என்ற வார்த்தையைப் பற்றியும் சிறிது விளக்கு வது அவசியமாகிறது. எழுதப்படுவது எல்லாம் இலக்கியமாகிவிடாது. எழுதப்படுபவை இலக்கியம் என்ற தகுதியை அடைவதற்கு சில விதிகள் இருக்கின்றன. பொதுவாக இலக்கியம் என்பது படைப்பாளியின் உள்ளத் தின் வெளிப்பாடாக, அவனுடைய அனுபவத்தின் வெளிப்பாடாக இருக் கிறது. இன்னும் ஒருபடி மேலே போய், படைப்பாளியின் அனுபவத்தின் வெளிப்பாடு அவனுடைய உள்ளத்தில் இருந்து பீறிட்டு மொழியின் கலைத் திறமையுடன் வெளி வரும்போது அது இலக்கியமாகிறது எனலாம். இலக்கி யம் படைப்பாளியின் சொந்த அனுபவமாக மட்டும் இல்லாமல் யதார்த்த மாகவும் அமையலாம். இலக்கியத்திற்கு பொருள் சுத்தம், மொழிச்சுத்தம், நடைச்சுத்தம் இன்றியமையாதது. இத்தகைய தகைமைகளைக் கொண்டிராத எழுத்துக்களை இலக்கியமாகக் கருத முடியாது.

இங்கே நாம் ஆத்மீக இலக்கியத்தை அதாவது, கிறிஸ்தவ இலக்கியத்தையே முதனிலைப்படுத்தி ஆராய்வதால், கிறிஸ்தவ இலக்கியத்துக்கிருக்க வேண் டிய அடிப்படை அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அம்சம் ஏனைய இலக்கியவகைகளுக்கு பொருந்தாது. இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியம் என்ற பெயரை அடைய அது சத்தியத்தின் அடிப்படையில், சத்தியத்திற்கு முரணில்லாத வகையில் அமைந்திருக்க வேண்டும். சத்தியத்தை மட்டுமே விளக்குவதாகவும், போதிப்பதாகவும் இருக்க வேண்டும். சத்தியத் துக்கு எந்தவிதத்திலும் முரண்பட்ட எழுத்துக்கள் கிறிஸ்தவ இலக்கியமாகா. இதற்கு ஆங்கிலத்தில் ஜோன் பனியன் எழுதிய மோட்சப் பயணத்தை (Pil-grims Progress) உதாரணங் காட்டலாம். பனியன் கிறிஸ்தியானின் பரிசுத்த வாழ்க்கையை வேதம் போதிக்கிறபடி எள்ளளவும் சத்தியத்தை மீறாமல் உருவகமாகப் படைத்திருக்கிறார். இது ஒரு வசன காவியம். கிறிஸ்தவ இலக் கியமாகக் கருதப்படுவதற்குரிய அத்தனை தகுதிகளும் இதற்குண்டு. இதேவித மாகவே பனியனின் பரிசுத்த யுத்தமும் (Holy War) அமைந்திருக்கின்றது.

இலக்கியங்கள் மொழிபெயர்ப்பு இலக்கியங்களாகவோ அல்லது நமது மொழியில் எழுதப்பட்டதாகவோ இருக்கலாம். இங்கே நாம் கிறிஸ்தவ வாடை வீசும் கதை, கவிதை, சிறுகதை, நாவல் இலக்கியங்களைக் கணக்கில் எடுக்கவில்லை. அவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். இவ்வாக்

கத்தில் முக்கியமாக வேதவிளக்கங்களைத் தருகின்ற வேத ஆராய்ச்சி நூல்கள், வேதக் கோட்பாடுகளை விளக்கும் நூல்கள் ஆகியவற்றை மட்டுமே கருத்தில் கொள்கிறோம். இதற்குக் காரணம் இன்றைக்கு தமிழினத்தில் ஆத்துமாக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு இத்தகைய இலக்கியங்களே அதிகம் தேவைப்படுகின்றன.

### உப்புச்சப்பற்ற பிரச்சார, வியாபாரப் பிரசுரங்கள்

தமிழகத்திற்குப் போகிற போதெல்லாம் கிறிஸ்தவ புத்தகக் கடைகளையும், ஏனைய புத்தகக் கடைகளையும் ஒருமுறை அலசிப் பார்த்துவிடுவதை நான் ஒரு கடமையாகவே வைத்திருக்கிறேன். இப்படிக் கடந்த பத்துவருடங்களாக நான் ஏறி இறங்கியிருக்கும் கடைகளில் வாசித்துப் பயன்பெற வாங்கியிருக்கும் நூல்கள் மிகச்சிலவே. அதற்கான காரணம் புரிந்திருக்கும். கிறிஸ்தவ இலக்கியம் என்ற பெயரில் இந்தக் கடைகளையெல்லாம் நிரப்பியிருக்கும் நூல்கள் பெரும் பாலும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் போதனைகளைப் பரப்புவனவாகவே இருக்கும். வெளிநாட்டுப் பணத்தில் அவை அழகாக அச்சிடப்பட்டிருந்தாலும் உள்ளே இருப்பவை உருப்படாதவை என்பது சொல்லித்தெரிய வேண்டிய அவசியமில்லை. உதாரணத்திற்கு பெனி ஹின்னின் (Benny Hynn) நூல்களையும், ஜொய்ஸ் மாயரின் (Joyce Mayer) நூல்களையும் குறிப்பிடலாம். இவர்களைப் பிரபல்யமாக்குவதற்கு பிரச்சார நூல்களாகவும், வியாபார நோக்கத்தில் மட்டுமே இவை எழுதப்பட்டவையாகவுமிருக்கும். கிறிஸ்தவ இலக்கியப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு இவை எந்தத் தகுதியும் இல்லாதவை. இதேவிதத்தில் தமிழகத்தைச் சேர்ந்த தினகரனும் அவரைப்போன்று ஊழிய வியாபாரம் நடத்திவரும் இன்னும் அநேகரின் நூல்களும் தவறாமல் புத்தகக் கடைகளை ஒவ்வொரு வருடமும் நிரப்பிவருகின்றன.

இவற்றைத் தவிர வருடத்தில் பல புத்தகங்களையாவது எழுதிவிட வேண்டும், பாராட்டுப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறவர்களும் உண்டு. இவர்களுடைய எழுத்துக்களில் வார்த்தை ஜாலங்கள்தான் அதிகமே தவிர தரமான வேதபோதனைகளுக்கு இடமிருக்காது. இவர்களுடைய நூல்கள் பொருளற்ற எழுத்துச் சாகரமாகவே இருக்கும். இதற்கு உதாரணமாக சாம் ஜெபத்துரை, மோகன் சி. லாசரஸ் போன்றோரின் நூல்களைக் கூறலாம். இவர்கள் கெரிஸ்மெட்டிக் இயக்கததைச் சார்ந்தவர்கள். இவர்களைத் தவிர எழுத வேண்டும் என்பதற்காகவே எழுதித் தள்ளிக் கொண்டிருப்போர் தமிழினத்தில் அதிகம். எட்டு அல்லது பத்துப் பக்கங்களைக்கொண்ட ஒரு சிறு சஞ்சிகையை வெளியிடாத ஒரு சபையையோ, ஸ்தாபனத்தையோ அல்லது ஊழியக்காரரையோ நாம் தமிழினத்தில் பார்க்காமல் இருக்க முடியாது. இவை பெரும்பாலும், தரமற்ற தமிழில், பொருள் சுத்தம், நடைச் சுத்தம் இல்லாமல் ஆத்மீகப் போதனை என்ற பெயரில் உப்புச்சப்பில்லாத அரைகுறை விளக்கங்களைத் தருவதாகவும், தனிமனித துதிபாடலுக்கும், காணிக்கை சேர்ப்பதற்காகவும் பிரச்சார ரீதியில் வெளியிடப்படுபவையாகவும் இருக்கும். ஒரு போதகனாகவோ அல்லது ஊழியக்காரனாகவோ இருந்துவிட்டால் அது மட்டுமே இலக்கியம் படைப்பதற்கான ஒரே தகுதி என்ற எண்ணம் தமிழினத்தில்

கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கிறது. தமிழையே சரியாகக் கையாளத் தெரியாதவர்கள் எல்லாம் தமிழில் துணிவோடு எழுத ஆரம்பித்து விடுகிறார் கள். இதனால் தரமற்ற எழுத்துக்களை வாசித்து சகிக்க வேண்டிய நிலை ஆத்துமாக்களைப் பிடித்திருக்கிறது.

## தமிழில் கிறிஸ்தவ மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்

தமிழில் இன்றும் பெரியளவில் கிறிஸ்தவ மொழிபெயர்ப்பு இலக்கியங் களைக் காணமுடியவில்லை. Evangelical Literature Service தமிழகத்தில் சிலவற்றை வெளியிட்டுள்ளது. இவை கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் வெளியானவை. அவை தொடர்ந்தும் வெளியிடப்படுவதால் அவற்றைக் குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அவற்றில் ‘ஸ்பர்ஜனின் அறிவுரைகள்’ ஒன்று. இது ஸ்பர்ஜன் எழுதி வெளியிட்ட ‘இறையியல் மாணவர்களுக்கான அறிவுரை’ என்ற ஆங்கில மூலத்தின் தமிழாக்கம். இது போதக ஊழியத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பயனளிக்கக் கூடிய சிறு நூல். அத்தோடு, ஜோன் ஓவனின் The Death of Death in the Death of Christ என்ற ஆங்கில நூலை ‘கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு’ என்ற தலைப்பில் தமிழில் வெளியிட்டுள்ளனர். இவை இரண்டுமே ஆங்கில மூலத்தின் சுருக்கம் மட்டுமே. இவர்கள் ஜோன் பனியனின் Pil-grims Progress ஐயும் தமிழில் ‘மோட்சப் பயணம்’ என்ற தலைப்பில் வெளி யிட்டுள்ளார்கள். இதில் எச். பி. ராஜ்குமார் மொழி பெயர்த்துள்ள புதிய மொழிபெயர்ப்பு சில காலம் அச்சிலில்லாமலிருந்து மறுபடியும் அச்சிடப் பட்டு அடுத்த மாதம் வெளிவரப்போகிறதாக அறிந்தேன். (இதன் பழைய மொழிபெயர்ப்பை Christian Literature Crusade வெளியிடுகிறது.) பனியனின் இந்த நூலுக்கான திறனாய்வை இதே இதழின் 28ம் பக்கத்தில் வாசிக்கலாம். ஜோன் பனியனின் இந்த நூல் மிகச் சிறந்த நூல். விசுவாசியின் ஆத்மீகப் பிரயாணத்தை உருவக மொழியில் அருமையாக விவரிக்கும் தலை சிறந்த இலக்கியம். இது ஒரு வசன காவியம். இது தமிழில் தொடர்ந்து வெளிவர வேண்டியது அவசியம். என் கையில் இருக்கும் பிரதி ஜுலை 1995ல் 533 பக்கங்களோடு வெளியிடப்பட்டது. ஆங்கில மூலத்தின் அனைத்துச் சிறப்புக்களையும் இதில் பார்க்கமுடியாவிட்டாலும் சாராம்சத்தையாவது இதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இது ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டிய நூல்.

ஜோர்ஜ் விட்பீல்டின் சில பிரசங்கங்களையும் அவருடைய வாழ்க்கைச் சுருக்கத்தோடு இவர்கள் ‘ஜோர்ஜ் ஓயிட்பீல்டு’ என்ற தலைப்பில் வெளியிட் டிருக்கிறார்கள். இங்கிலாந்தில் 18ம் நூற்றாண்டு பெற்றெடுத்த அதிரடிப் பிரசங்கியாகவும், இங்கிலாந்து, வேல்ஸ் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட எழுப்புதல்களின்போது கர்த்தரால் அதிகம் பயன்படுத்தப்பட்டவராகவும் ஜோர்ஜ் விட்பீல்ட் இருந்தார். ஜோர்ஜ் விட்பீல்டைப் பற்றி எதுவுமே அறிந்தி ராத தமிழ் கிறிஸ்தவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தக்கூடிய நூலிது.

இவர்கள் ஏ. டபிள்யூ. பிங்க் எழுதிய Sovereignty of God என்ற ஆங்கில நூலைத் தமிழில் ‘சர்வவல்லவரின் சர்வ ஏகாதிபத்தியம்’ என்ற தலைப்பில் பத்து வருடங்களுக்கு முன்பு வெளியிட்டிருந்தார்கள். இப்போது அது விற்ப

னைக்கு இல்லை. இத்தகைய நூல்களைத் தொடர்ந்து வெளியிட இவர்கள் ஆர்வம் காட்டுவதாக இல்லை. இத்தகைய ஆவிக்குரிய நல்ல நூல்கள் வியாபாரத்திற்குப் பயன்படாது என்ற வியாபார அணுகுமுறை இதற்குக் காரணாக இருக்கலாம்.

'தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்' சில ஆங்கில நூல்களின் சுருக்கத்தைத் தமிழில் வெளியிட்டு வருகிறது. ஆங்கில மூலத்தை வாசிக்க வசதியில்லாதவர்களுக்கு இவை உதவும். தொடக்கத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த நூல்களை மறுபடியும் ஆங்கிலத்தில் சுருக்கமாக வடித்து பின்பு அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதனால் ஏற்படும் முக்கிய பாதிப்பு ஆங்கில மூலத்தை அப்படியே வாசிக்க முடியாமல் போவதுதான். சுருக்கத்தின் போதும், மொழிபெயர்ப்பின் போதும் தவிர்க்க முடியாமல் அடிபட்டுப் போகும் விஷயங்கள் அநேகம். இவர்கள் வெளியிட்டுள்ளவற்றில் குறிப்பிடத்தக்கவை மார்டின் லூதரின் 'பிறவி அடிமைகள்', ஜோன் பிளேவளின் 'கடவுள் செயலின் இரகசியம்', ஒக்டேவியஸ் வின்ஸ்லோவின் 'கிறிஸ்தவனின் உள்ளான வாழ்க்கை' என்பவையாகும். வேறு சில நூல்களையும் இவர்கள் வெளியிட்டிருந்தாலும் அவை எல்லாமே அச்சில் இருக்கின்றனவா என்பது தெரியவில்லை.

இவற்றைத் தவிர ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து நாம் வெளியிட்டுள்ள '1689 விசுவாச அறிக்கையை' (1689 Confession of Faith) இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களுமான பாப்திஸ்துகள் 17ம் நூற்றாண்டில் எழுதிய விசுவாச அறிக்கை முதன் முறையாக தமிழில் 2002ல் 'சவரின் கிறேஸ் வெளியீடுகளால்' வெளியிடப்பட்டது. வேதபூர்வமான இறையியல் கோட்பாட்டைப் பின்பற்றுவதில் ஆர்வம் கொண்ட தமிழ் கிறிஸ்தவ சபைகளுக்கு இது மிகவும் பலனளிக்கும்.

## தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

தமிழில் முதன் முதலாக உருவான தரமான கிறிஸ்தவ இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் அவையும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளன. தமிழகத்தில் 'கிறிஸ்தவ இலக்கிய சங்கம்' (Christian Literature Crusade) வெளியிட்டுள்ள ஒரு நூல் 'இந்தியாவின் விடிவெள்ளி சீகன்பால்கு'. வில்லியம் கேரிக்கு முன்னதாக 1706ல் தமிழகத்துக்கு வந்து தரங்கம்பாடியில் சுவிசேஷப் பணிபுரிந்தவர் சீகன்பால்கு. அவருடைய வாழ்க்கைக் குறிப்பு இந்நூல். கத்தோலிக்க சமயத்தை கிறிஸ்தவ சமயமாகப் பார்க்கின்ற ஒரு பெரிய தவறைத் தவிர இந்நூல் சீகன்பால்குவின் அருமை ஊழியத்தை விளக்குவதாக இருக்கின்றது.

சவரின் கிறேஸ் வெளியீடுகள் இப்பத்திரிகையின் ஆசிரியர் எழுதியுள்ள 'இந்திய வேதங்களில் இயேசுவா?', 'திருச்சபை சீர்திருத்தம்', 'சீர்திருத்த விசுவாசம்', 'ஏன் பிரசங்கம்' ஆகிய நூல்களையும் வேறு சில நூல்களையும் வெளியிட்டுள்ளது. தொடர்ந்து நல்ல இலக்கியங்களை வெளியிட முயற்சி செய்து வருகின்றது. சீர்திருத்தப் போதனைகளையும், சீர்திருத்த போதக ஊழியத்தையும், சீர்திருத்த சபைக்கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்து முகமாக கடந்த பத்தாண்டு காலமாக வெளியீட்டு வருகின்றது.

*ஸ்ரீ லங்காவில் சத்திய வசனம் என்ற அமைப்பு பல ஆண்டுகாலமாக கிறிஸ்தவ நூல்களை வெளியிட்டு வருகின்றது. இவர்கள் வெளியிடும் நூல்களில் சில நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை. என் கையில் கிடைத்த 'கிறிஸ்தவனும் தொழிலும்' என்ற நூல் தொழில்பற்றிக் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய வேதபூர்வமான அணுகுமுறையை விளக்குவதாக இருந்தது. ஆசிரியர் மேற்கோள்களாக காட்டியிருந்த நூல்கள் பெரும்பாலும் கெரிஸ்மெட்டிக் எழுத்தாளர்களுடையதாக இருப்பது ஒரு குறைபாடு. இருப்பினும் இது பயனுள்ள ஒரு நூல்.*

*மொத்தத்தில் தமிழில் தரமான கிறிஸ்தவ இலக்கியங்கள் என்ற வரிசையில் இருக்கத் தகுதியான நூல்களின் தொகை குறைவு என்பது வருந்தத் தக்கது. ஆங்கில நூல்கள் கிடைப்பது அரிதாக இருப்பதாலும், ஆங்கிலத்தில் வாசிக்கும் வசதி பெரும்பாலானோருக்கு இல்லாததாலும் தமிழில் தரமான கிறிஸ்தவ இலக்கியங்கள் இன்று தமிழினத்தின் மத்தியில் கிறிஸ்தவம் சத்தியத்தின் அடிப்படையில் வளரத் தேவையாக இருக்கின்றன.*

## தமிழில் கிறிஸ்தவ இலக்கிய வரட்சி

*தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்களின் வரட்சி காணப்படுவதற்குக் காரணமென்ன? என்று கேட்காமல் இருக்க முடியாது. தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியில் ஸ்ரீ லங்கா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் மேலை நாடுகளான கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் பரவலாக ஆறு கோடிக்கு மேல் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இன்று தரமான கிறிஸ்தவ இலக்கியப் பஞ்சம் நிலவுவதற்கு காரணமென்ன?*

*இதற்கு வேத அடிப்படையிலும், வரலாற்றின் அடிப்படையிலும் சில முக்கிய காரணங்களை முன்வைக்கலாம். தமிழ் மக்கள் மத்தியில் வேத அடிப்படையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்டு அமையாதது என்னைப் பொறுத்தவரையில் முதலாவது காரணம். சீகன்பால்கும், வில்லியம் கேரியும் இந்தியாவுக்கு வந்திருந்தபோதும், அதற்குப்பிறகு இங்கிலாந்திலிருந்தும் மிஷனரிகள் வந்து உழைத்திருந்தபோதும் முழுமையாக சீர்திருத்தப் போதனைகளின் அடிப்படையில் கிறிஸ்தவம் நிலைபெறாமல் போய்விட்டது. நமது இனத்தின் புறஜாதிக் கலாச்சாரமும் மிஷனரிகளின் ஊழியப் பணியைப் பாதித்தது. கேரியின் அளவுக்கு சத்திய வாஞ்சையும், திறமையும் கொண்டு நமது பண்பாட்டைக் கண்டு பதறாமல், அதற்குத் தம்மைப் பலி கொடாமல் உழைத்து வெற்றி கண்ட மிஷனரிகளின் தொகை குறைவு. நம் மத்தியில் அமைந்த ஆரம்ப சபைகள் சிலுவை நாயகனில் இருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்தபோதும் வேதபோதனைகளில் ஆழமான அறிவற்று, சத்திய வாஞ்சையற்றவையாகவும், பண்பாட்டுக்கு அடிமையானவையாகவும் இருந்தன. காலஞ் செல்லச் செல்ல அவற்றின் நிலை மோசமாகவும் தொடங்கியது. அதற்குப்பின் வந்த பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கம் திருச்சபைகளைப் பாதித்து கிறிஸ்தவத்தை வெறும் மானுட உணர்ச்சிகளுக்கு அடிமையாக்கி வேதத்தைவிட்டு வெகுதூரம் கொண்டு போய் கனவுலகில் விட்டிருக்கின்றன. இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் ஒருசில சபைகளைத் தவிர கோட்பாட்டுக் குளறுபாடுகளைக்*

கொண்ட சபைகளே பொதுவாக கிறிஸ்தவ சபைகள் என்ற பெயரில் ஆத்துமாக்களை இருட்டில் வைத்திருக்கின்றன.

இதோடு தொடர்புடைய இன்னொரு முக்கிய காரணம், படிப்பறியாத, உயர்சாதியினரால் புறக்கணிக்கப்பட்ட சாதியில் குறைந்த தரத்தில் இருந்த வர்கள் மத்தியில் ஆதியில் கிறிஸ்தவ ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டதால் வேதத்தைத்தவிர வேறு கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு அவசியமில்லாது போய்விட்டது. முக்கியமாக கிராமப்புற மக்கள் மத்தியிலும், மலை வாழ் மக்கள் மத்தியிலுமே ஆரம்பத்தில் ஊழியங்கள் தொடங்கப்பட்டன. இன்றும் இது தொடர்கிறது. இவர்கள் மத்தியில் ஊழியங்கள் செய்யக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. இத்தகைய மிஷனரி அணுகுமுறை இலக்கிய வளர்ச்சிக்கு இடமில்லாமல் செய்துவிட்டது.

ஆழமான வேத சத்தியங்களின் அடிப்படையில் சபைகள் அமையாததால் போதக ஊழியம் செய்ய வந்தவர்களும் சத்தியத்தில் நல்லறிவு பெற்றவர் களாக இருக்கவில்லை. இன்றும் அநேக போதகர்கள் ஆழமான இறையியல் அறிவில்லாதவர்களாகவும், அவற்றை இனங்கண்டு அடையும் ஆர்வமும், பக்குவமும் இல்லாதவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

தமிழினத்தில் காணப்படும் இன்னுமொரு பெரிய குறைபாடும் தரமான கிறிஸ்தவ இலக்கியப் பஞ்சத்தை நம்மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. நமது மக்கள் நூல்கள் வாசிப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்பதே அந்தக் குறைபாடு. என்னுடைய போதக ஊழிய அனுபவத்தில் நான் பார்த்தவரை யில் படித்திருக்கிற தமிழ் கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள்கூட நல்ல கிறிஸ்தவ இலக்கியங்களை வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்ப தில்லை. ஆங்கிலம் தெரிந்தவர்களும்கூட அதைச் செய்வதில்லை. இது ஒரு தவறான பண்பாடாகவே நமது இனத்தில் இருந்து வருகிறது. ஞாயிறு ஆராதனைப் பிரசங்கத்தைக் மட்டும் கேட்டு ஆத்மீக வளர்ச்சி அடைந்து பரலோகம் போய்விட முடியும் என்று அநேகர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வாசிக் காதவர்களால் சிந்திக்க முடியாது. சிந்திக்க முடியாதவர்கள் அறிவில் வளர முடியாது. வேத அறிவற்ற கிறிஸ்தவன் என்ற வார்த்தைகளுக்கு கர்த்தரின் அகராதியில் இடமில்லை. இப்படி வாசிக்கும் பழக்கம் இல்லாததால் மேலைத்தேய நாட்டில் வாழும் சராசரி கிறிஸ்தவ இளைஞனுக்கு இருக்கும் வேத அறிவைக் கூட தமிழினத்தில் காணமுடியாதிருக்கிறது. இக்காரணத் தால் ஒரு சில நல்ல நூல்கள் வெளிவந்தாலும் அவற்றை வாங்கி வாசிப்பவர் களின் தொகை மிகவும் குறைவு. வாங்குபவர்கள் இல்லாதபோது நல்ல நூல்களை யார் அக்கறையோடு வெளியிடப் போகிறார்கள்?

இவையெல்லாம் வேதசத்தியங்களில் ஆர்வமில்லாத கிறிஸ்தவத்தை தமிழினத்தில் உருவாக்கி தரமான கிறிஸ்தவ இலக்கியங்கள் உருவாகத் தடையாக அமைந்து விட்டன. கிறிஸ்தவ இலக்கியங்கள் என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களும், பத்திரிகைகளும் தரமற்ற மலிவுப்பதிப்புகளாக பிரச்சார நோக்கத்தில் மட்டுமே வெளியிடப்பட்டு வருகின்றன.

## தமிழில் கிறிஸ்தவ இலக்கியத்தின் எதிர்காலம்

வேத அடிப்படையில் அமைந்த தரமான சபைகள் உருவான காலத்தில் தான் வரலாற்றில் தரமான கிறிஸ்தவ இலக்கியங்களும் படைக்கப்பட்டன என்பதை எவராலும் மறுக்க முடியாது. 16ம் நூற்றாண்டு சீர்திருத்த காலமும், 17ம் நூற்றாண்டு பியூரிட்டன்களின் காலமும் இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. இக்காலப்பகுதிகளில் ஆழமான அறிவுடைய அநேக போத கர்களை கர்த்தர் எழுப்பியிருந்தார். அவர்கள் வேதபூர்வமான திருச்சபை அமைக்கும் பணியில் எங்கும் ஈடுபட்டிருந்தனர். சிறந்த போதகர்களாகவும், நல்லறிஞர்களாகவும் இருந்த இவர்கள் தரமான கிறிஸ்தவ இலக்கியங்களைப் படைத்து மக்கள் ஆத்தும விருத்தியடைய துணை புரிந்தனர். இங்கிலாந்தில் கிடர்மின்ஸ்டர் என்ற ஊரில் வினாவிடைப் போதனைகளை ஒரு வீடு தவறாமல் அனைத்து மக்களும் படித்து கர்த்தரில் வளரும்படி ஊழியம் செய்திருந்தார் ரிச்சட் பெக்ஸ்டர்.

கல்வினும், லூதரும், பனியனும், ஓவனும், பிளேவலும் தரமான கிறிஸ்தவ இலக்கியங்களைப் படைத்து மக்கள் அவற்றை வாசித்து வளரும்படிச் செய்தனர். இவர்கள் எழுதியுள்ள இலக்கியங்கள் காலத்தால் அழியாதவை. பக்திவிருத்தியும், வேத ஞானமும் உள்ள போதகர்களும், வேத அடிப்படை யில் அமைந்த சபைகளும் இருக்கும்போது ஆத்துமாக்கள் அறிவிலும், பக்திவிருத்தியிலும் வளர முடிகிறது என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். அத்தோடு, தரமான இலக்கியங்களும் உருவாகக்கூடிய சூழ்நிலை அமைகிறதையும் பார்க்கிறோம். தரமான இலக்கியங்கள் வருங் கால சந்ததியினருக்கு வழிகாட்டி அவர்களை வளர்ப்பதற்கு உதவுகின்றன. சீர்திருத்தவாத, பியூரிட்டன் காலங்கள் இத்தனை ஆசீர்வாதங்களையும் கொண்டிருந்த காலங்களாக வரலாற்றில் வாசிக்கிறோம்.

கடந்த பத்து வருடங்களில் தரமான கிறிஸ்தவ இலக்கியங்களின் வளர்ச்சி குன்றிக் காணப்பட்டபோதும் நாம் நம்பிக்கையிழந்துவிடக்கூடாது. தன் மக்களை எல்லா இனங்கள் மத்தியிலும் வைத்திருக்கும் தேவன் நிச்சயம் நமது இனத்திலும் தன்னுடைய மக்களைக் கொண்டு தரமான சபைகளை நிறுவுவதோடு தரமான இலக்கியங்களையும் எழச்செய்வார் என்பதை நாம் நம்பலாம். தமிழ் கிறிஸ்தவ உலகில் போலித்தனங்கள் மிகுந்திருந்தபோதும், சத்தியத்திற்கு இடமில்லாதிருக்கின்றபோதும், சத்திய வாஞ்சையுள்ளவர் களும், சத்திய வாஞ்சையுள்ள சபைகளும் உருவாகி வருவது நம் நெஞ்சைக் குளிர வைக்கிறது. இந்த வகையில் சபைகள் உருவாகி, ஆத்துமாக்கள் சத்தியத்திற்காக அலைய ஆரம்பித்தால் தரமான இலக்கியங்கள் தோன்றா மல் போகாது.

### நன்றி! நன்றி! நன்றி!

பத்திரிகைக்கு ஆதரவு தந்தும், கடிதங்கள் எழுதி எம்மை ஊக்குவித்தும் வரும் வாசகர்களுக்கும், சீர்திருத்தப் பாதையை அடையாளம் கண்டு அதில் காலடி எடுத்துவைத்து நடந்து வரும் அன்பு சகோதரர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். - பத்திரிகைக் குழு

# பத்தாண்டுகால பத்திரிகை உலக அனுபவம்

தனிப்பட்ட முறையில் என்னைப்பற்றியும் என்னுடைய அனுப வங்களைப் பற்றியும் எழுதுவது எனக்குப் பிடித்தமில்லாத காரியம். இந்தப் பத்தாண்டுகளில் என்னைப்பற்றி அப்படி எதையும் நீங்கள் இந்தப் பத்திரிகையில் வாசித்திருக்க மாட்டீர்கள். கடந்த பத்தாண்டுகளை நினைவுகூருகிறபடியால் இந்தக் காலப்பகுதி காட்டித் தந்திருக்கின்ற உண்மைகளைப் பற்றி பேசுகிறபோது அதில் என் அனுபவங் களைக் குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. இருந்தாலும் அவசியமானவற்றை மட்டும் பகிர்ந்துகொள்ள முயற்சி செய்கிறேன்.

தமிழினம் வாழ்கிற தேசங்களையெல்லாம் தள்ளி உலகத்தின் மறு கோடி யில் இருக்கும் நியூசிலாந்து நாட்டில் ஒரு ஆங்கில சபைக்கு போதகனாக இருக்கும் என்னைத் தமிழில் ஒரு காலாண்டுப் பத்திரிகை நடத்தும்படி கர்த்தர் அழைத்த வரலாற்றை இன்றும் நினைத்துப் பார்த்தால் ஆச்சரிய மாகத்தான் இருக்கிறது. என்றாவது கிறிஸ்தவ இலக்கியப் பத்திரிகை யொன்றை தமிழில் வெளியிட வேண்டும் என்ற வாஞ்சையோ, வைராக் கியமோ, கனவோ, தரிசனமோ ஒருபோதும் எனக்கிருந்ததில்லை. தகுதியே இல்லாதவர்களும், தமிழெழுதத் தெரியாதவர்களும், இறையியலறிவு அறவே இல்லாதவர்களும் அத்தகைய காரியத்தில் மாம்சத்தின் துணிச்சலுடன் ஈடுபட்டு வருவது நாமறிந்ததே. வெறும் குருட்டார்வத்துடன் பெயர் வாங்கு வதற்காகவும், பணம் சேர்ப்பதற்காகவும் செய்கிற காரியமல்ல பத்திரிகை வெளியிடுவது என்பதும் எனக்குத் தெரிந்திருந்தது. எதையும் சட்டென்று செய்துவிடுகிற, செய்யத் துணிகின்ற போக்கும் எனக்கென்றும் இருந்ததில்லை. அப்படியானால் திருமறைத்தீபம் பிறந்ததெப்படி? என்ற கேள்வி உங்களுக்கு எழுகிறதல்லவா.

நானறிந்த நேசிக்கின்ற தமிழ்ப் போதகர்கள் சிலரின் வற்புறுத்தலின் விளைவே இந்தப் பத்திரிகை. “நாங்கள் அடிக்கடி படித்து அறிவை வளர்த்துக் கொள்ளவும், ஆத்துமாக்களுக்கு சபைகளில் போதிக்கவும் வசதியாக எங்க ளுக்கு எழுத்தில் இறையியல் போதனை தர முடியுமா?” என்று அடிக்கடி கேட்டு வந்த, நான் அன்பு செலுத்துகிற, என்மீது அன்பு வைத்திருக்கிற சில போதக உள்ளங்கள்தான் இந்தப் பணியில் என்னை ஈடுபட வைத்தன. இவர் கள் கேட்டதை எப்படிச் செய்வது என்று புரியாமல் குழம்பி என்னுடைய அருமை நண்பர்கள் இருவரிடம் ஒருநாள் இதைப் பகிர்ந்து கொண்டேன். அந்த இருவரும் எனக்குப் பலவருடங்கள் பரிச்சயமான உற்ற நண்பர்கள்; கர்த்தரின் பணியில் அதிக ஆர்வம் காட்டி வருகிறவர்கள்.

அதற்கு ஒரே வழி காலாண்டு பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து இருளி லிருக்கும் தமிழ் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு விடுதலை தருவதுதான் என்று

அந்த இரண்டு நண்பர்களும் என்னை வற்புறுத்த ஆரம்பித்தார்கள். எவ்வளவு பெரிய காரியத்தை இத்தனை சுலபமாக சொல்லிவிட்டார்களே என்று நான் அதைப் பல மாதங்கள் அசட்டை செய்து வந்தேன். கல்லூரியில் படித்த காலத்தில் நான் இலக்கிய ஆர்வம் கொண்டு இலக்கியங்களைக் கற்றிருக் கிறேன்; எழுதியுமிருக்கிறேன். அது திருறைத்தீபம் ஆரம்பிப்பதற்கு இருபதாண்டுகளுக்கு முன்பு. தமிழிலேயே அதிகம் பேசாமல் வாழ்ந்து வரு கிற நியூசிலாந்தில் இருந்து தமிழில் எழுதுவது எப்படி? அதற்கு எங்கிருந்து நேரம் கிடைக்கப்போகிறது? அதற்குப் பணச்செலவு, கொடுக்க வேண்டிய நேரம், புதிது புதிதாக எழுத வேண்டிய ஆக்கங்கள், எழுதியதைத் திருத்து வதற்கு நேரம், டைப் செய்து பிரின்டுக்கு தயார் செய்ய வேண்டிய வேலைகள் என்ற பத்திரிகை சம்பந்தமான வேலைகள் எல்லாம் பூதாகாரமாக உருவெடு த்து பயமுறுத்தியதோடு என்னைப் பின்வாங்கவும் செய்தது என்று சொன் னால் அது மிகையாகாது. என் நண்பர்களும் தொடர்ந்து பல மாதங்களாக ஒற்றைக் காலில் நின்று வற்புறுத்தி இறுதியில் சம்மதிக்க வைத்தார்கள். அவர்க ளுடைய ஜெபமும், ஊக்குவிப்பும், ஆதரவும்தான் 1995ல் திருமறைத்தீபத்தை எட்டுப் பக்கங்களோடு ஆரம்பித்து வைத்தது. அது பல்கிப் பெருகி இன்று 52 பக்கங்கள் கொண்ட காலாண்டுப் பத்திரிகையாக பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

இந்தப் பத்தாண்டு காலத்தையும் திரும்பிப் பார்க்கின்றபோது இதையெல் லாம் எப்படிச் செய்தோம் என்று மலைப்புத் தட்டுகிறது. கர்த்தரின் துணை யும், சீர்திருத்த சத்தியத்தில் நண்பர்களும், வாசகர்களும் கொண்டிருக்கும் வாஞ்சையும், அவர்களுடைய ஊக்குவிப்பும்தான் இவ்வளவு தூரம் பத்திரிகையையும் என்னையும் அழைத்து வந்திருக்கிறது. கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறேன். அது நீண்ட பாதை. பல ஆசீர்வாதங் களையும், உற்சாகத்தையும் அந்தப் பாதை தந்திருந்தாலும், சில வேளை களில் ஏமாற்றத்திற்கும் இடம் கொடுத்திருக்கிறது. ஆரம்பத்தில் சத்தியத்தில் ஆர்வம் காட்டி இடையில் விழுந்துவிட்டவர்களையும் அந்தப் பாதையில் நான் சந்தித்திருக்கிறேன். இடையில் வந்து இணைந்துகொண்ட போதும் சத்திய வாஞ்சையோடு நம்மேல் பாசம் வைத்துப் பழகுகிறவர்களையும் அந்தப் பாதை எங்களுக்கு இனங்காட்டித் தந்திருக்கிறது. எப்படியிருந்த போதும் இருளில் இருக்கும் தமிழ் கிறிஸ்தவ உலகில் பலரின் கண்களைத் திறக்க பத்திரிகை தொடர்ந்து துணைபுரிந்து வருவது நெஞ்சைத் தொடு கின்றது. அந்த ஒரு காரியத்துக்காக மட்டுமே தொடர்ந்து பத்திரிகையை வெளியிட்டு வருகிறோம். கண்கள் திறக்கப்பட்டவர்களைக் கர்த்தர் பயன்படுத்தி தமிழினத்தில் போலித்தனமற்ற, தரமான கிறிஸ்தவ சபை களைத் தம்முடைய மகிமைக்காக உருவாக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பமும், ஜெபமுமாகும்.

இந்தப் பத்தாண்டுகாலப் பத்திரிகை அனுபவத்தில் நான் கற்றுக் கொண்ட பாடங்கள் அநேகம்.

**1. சத்தியத்தில் வைராக்கியத்தை என்னில் அதிகரித்திருக்கிறது.**

திருமறைத்தீபம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே எழுத வேண்டும்

என்பதற்காகவும், எல்லோரும் வாசிக்க வேண்டும் என்ற காரணத்திற் காகவும் எழுதாமல் சத்தியத்தைப் பகுத்து விளக்கவும், அதை சத்தியமாகப் போதிக்க வும் வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் உறுதியாக இருந்தேன். நம்மினத்தில் 'கிறிஸ்தவம்' என்று அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிற அத்தனைப் பிரிவுகளோடும் ஒத்துப்போய் சமய சமரச வியாபாரம் செய்யும் நோக்கம் எனக்கு என்றும் அறவே இருந்ததில்லை. பத்திரிகை ஆரம்பித்த சில வருடங்களிலேயே "எல்லோரோடும் ஒத்துப்போய் நீங்கள் ஏன் எழுதக் கூடாது? அது எல்லோரும் பத்திரிகையை வாசிக்க உதவுமே" என்று ஆலோசனை சொன்னவர்கள் அநேகம். சத்தியமாக இல்லாததை இனங் கண்டு அதை (வேத அடிப்படையில்) வெளிச்சம் போட்டுக் காட்டியபோது, "இதையெல்லாம் செய்யாமல் வெறும் சத்தியத்தை மட்டும் எழுதினால் போதுமே" என்று சொன்னவர்களும் உண்டு. சிப்பியை உடைத்துத்தான் முத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அது வேறு வழியில் கிடைக்காது என்பது இந்த நண்பர்களுக்கு புரியவில்லையே என்று அப்போதெல்லாம் எண்ணியிருக்கிறேன். நம்மக்கள் சத்தியத்தின் அருமையை உணர்ந்து பின்பற்ற முதலில் அவர்களுடைய ஆத்மீக சரீரத்தில் ஏற்பட்டிருக்கிற புண் ணின் விளைவை அவர்களுக்கு உணர்த்தாமல் அதைச் செய்ய முடியாது என்பதால்தான் அவசியமான வேளைகளில் அசத்தியத்தை இனங்காட்ட நேரிடுகிறது. அதைச் செய்யும்போது அசத்தியத்துக்கு அடிபணிந்து அதைப் பரப்புகின்ற தனிபர்களை (தனிப்பட்ட முறையில் அவமதிக்காமல்) இனங் காட்ட வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் எதிர்மறையான இடை யூறுகளாகக் கருதாமல் சத்தியத்தில் எனக்கு வைராக்கியத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களாகவே எப்போதும் கருதியிருக்கிறேன். நான் ஒத்து ஊதிக் கொண்டிருக்கிறவனாக மாறிவிடாமல் சத்தியத்தில் வைராக்கியத் தோடிருக்க கர்த்தரின் கிருபை எனக்கு இன்றும் உதவிக்கொண்டிருக்கிறது.

**2. என்னை சத்தியத்தில் வாஞ்சையோடு வளர வைத்திருக்கிறது.**

இருபத்தேழு வருட காலமாக நான் விசுவாசித்து வருகின்ற சீர்திருத்த போதனைகளில் தீவிரமான வாஞ்சையோடு தொடர்ந்து வளர திருமறைத் தீபம் உதவி வருகின்றது. விசுவாசிக்கும் சத்தியத்தை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறபோதும், அந்த சத்தியம் பலரின் கண்களைத் திறக்கின்ற அற்புதத்தைக் காண்கிறபோதும், சத்தியத்தின் மகிமையை உணர்ந்து அதை மேலும் தீவிரத்தோடு பின்பற்ற முடிகின்றது; வளர முடிகின்றது. சத்தியத்தை விற்றுப் பிழைப்பவர்கள் மத்தியில் சத்திய வாஞ்சையுள்ளவர்களோடு இணைந்து வளர, பாடுபட உதவி வருகிறது திருமறைத்தீபம்.

**3. இப்பத்திரிகைப் பணி கடந்த பத்தாண்டுகாலமாக நேரத்தை மீதப்படுத்தி என்னை அதிகம் உழைக்க வைத்திருக்கிறது**

விடிவதற்கு முன்னும், இருள் படர்ந்து எல்லோரும் தூங்கியபின்னும் வாசிக்கவும், எழுதவும், எழுதியவற்றை சரிபார்க்கவும் வைத்திருக்கிறது. இருபத்திநாலு மணி நேரங்கள் போதாது என்று எண்ணிக் கொண்டிருந்த என்னை நேரத்தை மீதப்படுத்தி உழைக்க வைத்திருக்கிறது. முன்பு ஒவ்வொரு நாளும் எத்தனை மணி நேரங்களை வீணாக்கியிருந்திருக்கிறோம்

என்பதை உணர்த்தியிருக்கிறது. நேரமில்லை, நேரமில்லை என்று சொல்லு கிறவர்கள் இருக்கும் நேரத்தில் அநாவசியமாக கழிக்கும் நேரத்தை மீதப் படுத்தி உழைத்தால் கர்த்தருக்கு மகிமை சேரும். அவருடைய பணிகளையும் செவ்வையாய் செய்யலாம் என்பதை இந்தப் பத்தாண்டு காலம் உணர்த்தி யிருக்கிறது.

### 4. என் வாசிப்பின் பலனையும், உழைப்பின் பலனையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள வைத்திருக்கிறது.

இந்தப் பத்தாண்டு காலத்தில் பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் நான் கற்றுக்கொண்டவைகள் அநேகம். தரமான ஆக்கங்களை வேத அடிப் படையில் தயாரித்து வழங்க வேண்டும் என்ற உந்துதல் என்னை அதிகம் வாசிக்க வைத்திருக்கிறது. இதற்கு முன்பு வாசித்ததைவிட வாசிப்பில் அதிக கவனம் செலுத்த உதவிசெய்திருக்கும் திருமறைத்தீபத்துக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். இந்தப் பத்தாண்டுகளில் பத்திரிகை ஊழியத்துக்காக சிரமத்துடன் வாசித்திருக்கும் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகளின் பட்டியலை எண்ணிப் பார்க்கிறேன். அவை கிறிஸ்தவ உலகின் தற்கால சிந்தனைப் போக்கை எனக்கு புலப்படுத்தியிருக்கின்றன. புதுரூபம் எடுத்து உலவி வரும் போலிப் போதனைகளை அடையாளங்காண உதவியிருக் கின்றன. என் சிந்தனை வளர்ச்சியடைய உதவியிருக்கின்றன.

வாசிப்பது போதகனுக்கு அவசியமான பணி. வாசிப்பு நம்மை சிந்திக்க வைக்கிறது; வேத அறிவில் வளர உதவுகிறது; வேத சத்தியங்களைத் துல்லிய மாக விளக்க உதவுகின்றது. அசத்தியத்தைத் தோலுரித்துப் பார்க்கவும் உதவுகிறது. காலத்தைப் புரிந்துகொண்டு ஆத்துமாக்களுக்கு ஆத்மீக வழிகாட்ட வாசிப்பும், சிந்தனையும் அவசியம். என் வாசிப்பின், சிந்தனை யின் பலன்களை வாசகர்களோடு பகிர்ந்துகொள்வது எனக்குக் கிடைத்துள்ள பெரிய ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். அதற்கு வாய்க்காலாக இருந்து வருகிறது பத்திரிகை.

### 5. தமிழினத்தில் கிறிஸ்தவத்தின் நிலையை உணர வைத்திருக்கிறது.

பத்திரிகையை ஆரம்பிக்கு முன் தமிழினத்தைவிட்டு விலகி தூர தேசத் தில் சபைப்பணி புரிந்துகொண்டிருந்த நான் நம்மினத்தின் ஆத்மீக அவல நிலை பற்றி ஓரளவே அறிந்து வைத்திருந்தேன். வேதபூர்வமான சீர்திருத்த கிறிஸ்தவம் நம்மினத்தில் வளர்ச்சியுறாமலிருந்தது ஏற்கனவே எனக்குத் தெரிந்திருந்தது. இருந்தாலும் ஆத்மீகப் புண் எந்தளவுக்கு சிதலுற்று விஷம் போலப் பரவி சரீரத்தையே பாதிக்குமளவுக்கு பரவியிருக்கிறது என்பதை பத்திரிகைப் பணி மூலமே தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது. வாசகர் களிடமிருந்து தொடர்ந்து வரும் கடிதங்களும், போதகர்களோடு நடந்த பல்வேறு பரிமாறல்களும், தமிழினத்து சபைகளோடு இருக்கும் தொடர்பும் நம்மினத்தில் கிறிஸ்தவம் இருண்ட காலத்தில் இருப்பதை தெளிவாக விளக்கின. கிறிஸ்தவம் என்ற பெயரில் புடவைக்கடை பொம்மை போல வெளிப்பார்வைக்கு அழகாக என்னென்னவோ நடந்து வந்தபோதும், சத்தியத்தை வைத்து வியாபார விபச்சாரம் நடந்து வருகின்ற அலங்கோலங் களை அறிந்துகொள்ள முடிந்தது. அது எனக்கு வருத்தத்தை மட்டும்

*ஏற்படுத்தவில்லை; அந்த நிலைமாற எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற ஆதங்கத்தையும், உந்துதலையும் என் உள்ளத்தில் ஏற்படுத்தியது. அதற்காகப் பத்திரிகைக்கும் அதை ஆரம்பிக்கக் காரணமாக இருந்த கர்த்தருக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும்.*

**6. சத்தியத்தை நேசிக்கிறவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற வைராக் கியத்தை உண்டாக்கியிருக்கிறது**

*நாம் நேசிக்கின்ற அதே சத்தியத்தை நேசிக்கிறவர்களை சந்திப்பதும், அவர் களோடு இணைந்து வாழ்வதும், உழைப்பதும் தரும் ஆத்ம திருப்தியை சொல்லில் விளக்கிவிட முடியாது. "என்னைப் போல மனதுள் ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்தில் இல்லை" என்று பவுல் தீமோத்தேயுவைக் குறித்து பிலிப்பியர் 2:20ல் சொல்லுகிறார். தீமோத் தேயு வெறும் விசுவாசியல்ல, பவுல் வாஞ்சித்தவைகளில் நம்பிக்கை வைத்து பவுலைப் போல வைராக்கியமுடைய விசுவாசியாக இருந்தான். அவனோடு உறவாடுவதும், இணைந்துழைப்பதும் பவுலுக்கு எல்லையற்ற திருப்தியை அளித்தது. அதுபோல சத்தியத்தில் வாஞ்சையுள்ளவர்களை இனங்கண்டு அவர்களோடு இணைந்துழைக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை இந்தப் பணி என்னில் ஏற்படுத்தியிருக்கிறது.*

**7. தமிழை நேசிக்கச் செய்திருக்கிறது**

*பத்து வருடங்களுக்கு முன்பு பத்திரிகையை ஆரம்பிக்கும்போது தமிழில் பேசுவதும், எழுதுவதும் அருகிப்போய் தாய்மொழியே அந்நிய மொழி யாகிவிடுகிற நிலையில் இருந்தபோதுதான் அதன் மேன்மையை உணர்த்து வதுபோல் வந்து அமைந்தது தமிழில் என்னுடைய எழுத்துப் பணி. எழுத்தில் போதனை வேண்டும் என்று கேட்ட நண்பர்களின் உந்துதலால் ஆரம்பித்த இந்தப் பணி மூலம் மறுபடியும் என் தாய் மொழியை நேசிக்க ஆரம்பித்தேன். அதன் அருமையை உணர ஆரம்பித்தேன். பிறந்ததிலிருந்து பேசி வளர்ந்த மொழியை இழந்துபோகிற நிலையின் கொடுமையை முதல் தடவையாக என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இது எத்தனை பேருக்கு புரிகிறதோ இல்லையோ எனக்குப் புரிந்தது. இதற்காக வேற்றுமொழிகளைக் கற்றுக் கொள்ளக்கூடாது என்பதில்லை. எதை இழந்தாலும் தாய்மொழியை இழக்காமல் பார்த்துக் கொள்வது அவசியம் என்று எனக்குப்படுகிறது. காலம் கடந்து நான் கற்றுக்கொண்ட உண்மை இது. நம் நாட்டிற்கு வந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தவர்கள் நம் மொழியைக் கற்றுக்கொள்ள எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள் என்பதையும் உணர முடிந்தது. கர்த்தரின் கிருபையால் நமக்குக் கிடைத்த அருமை மொழி, அது எதுவாக இருந்தா லும் எவரும் அதை இழந்துபோகக் கூடாது என்பதை இப்போது நான் உணர உதவி செய்திருக்கிறது திருமறைத்தீபம்.*

*கடந்த பத்தாண்டுகளாக பத்திரிகை காட்டித் தந்துள்ள பாதையில் வாசகர்களோடு இணைந்து வாஞ்சையோடு தொடர்ந்து பயணம் செய்ய கர்த்தர் இனி வருங்காலத்திலும் உதவுவார் என்ற நம்பிக்கையோடு எதிர் காலத்தை எதிர்நோக்குகிறேன். விடியும் என்ற நம்பிக்கையோடு இருட்டில் விளக்கேந்தி வெளிச்சத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன்.*

# நமது சீர்திருத்தவாத பாரம்பரியம்

ஐரோப்பாவையே கலங்கவைத்த ஆண்டு 1517. கத்தோலிக்க மதத்திற்கெதிரான திருச்சபை சீர்திருத்தம் ஆரம்பித்த ஆசீர்வாதமான ஆண்டு. அந்த ஆண்டில் ஆரம்பித்துவைக்கப்பட்ட சீர்திருத்தத்தின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்தப் பத்திரிகையைக் கூட சத்தியத்தின் அடிப்படையில் நம்மால் வெளியிட முடிகிறது. 1517ம் ஆண்டில் அக்டோபர் 31ம் தேதி நிகழ்ந்த, திருச்சபை சீர்திருத்தத்தின் ஆரம்ப கட்டமான அந்த நிகழ்ச்சியின் காரணமாக வருடாவருடம் உலகெங்கும் சீர்திருத்த சபைகள் அந்த நாளை சீர்திருத்த நாளாக (Reformation Day) நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

**கத்தோலிக்கத்தின் காட்டாட்சியும், லூதரின் சத்திய வேட்கையும்**

பதினாறாம் நூற்றாண்டில் உலகின் பெரும்பாகங்களைத் தன் கரத்தில் வைத்து கொடூர ஆட்சி செலுத்தி வந்தது ரோமன் கத்தோலிக்க மதம். அதன் தலைவனான போப் கிறிஸ்துவின் அப்போஸ்தலனான பேதுருவின் தெய்வீக வழித்தோன்றலாக தன்னை இனங்காட்டிக் கொண்டு நாடுகளையும், மக்களையும் மதத்தின் அடிப்படையில் ஆட்சிபுரிந்து வந்த காலம் அது. பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்பு பல நூற்றாண்டுகளாகவே கத்தோலிக்க மதத்தின் அட்டகாசங்களும், அட்டூழியங்களும் மக்களை அம்மதத்தின்மீது வெறுப்படையச் செய்திருந்தன. இருந்தாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியாதபடி அரசும், பேரரசனும், இளவரசர்களும் கத்தோலிக்க மதத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தனர். கத்தோலிக்க மதத்தையும், போப்பையும் எதிர்த்தவர்கள் உயிரையே இழக்க நேர்ந்தது. அப்படி உயிரிழந்தவர்கள் அநேகர். தன்னோடு முரண்பட்ட நாடாளும் அரசனை அவனுடைய குடும்பத்தோடு தன் மாளிகைக்கு முன்பாக பனியில் மூன்று நாட்கள் பசியோடு மண்டியிட்டு தனக்குக் கருணைகாட்டுமாறு கேட்க வைத்த சமயத்தலைவராக இருந்திருக்கிறார் ஒரு போப். இத்தனையையும் கடவுளின் பெயரில் செய்து கொண்டிருந்தது கத்தோலிக்க மதம்.

கத்தோலிக்க மதத்தின் இந்த அராஜக ஆளுகை நடந்துகொண்டிருந்த காலத்தில்தான் கர்த்தர் அற்புதமாக ஒரு கத்தோலிக்கத் துறவியின் இதயத்தில் ஆத்மீகத் தாகத்தை ஏற்படுத்தினார். அந்தத் துறவிதான் ஜெர்மனியைச் சேர்ந்த மார்டின் லூதர். கத்தோலிக்க மதகுருவாக அவர் விட்டன் பேர்க் கல்லூரியில் இறையியல் போதிக்கும் விரிவுரையாளராக இருந்தார். பல மொழிப்பாண்டித்தியம் பெற்றவராக, அறிஞராக இருந்த லூதருடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்பட ஆரம்பித்தார். லூதர் தான் ஒரு பாவி என்பதையும், தான் கர்த்தரைவிட்டு விலகி

பாவத்தில் வாழ்வதையும் உணர்ந்து ஆத்மீக விடுதலைக்கான வழியைத் தேட ஆரம்பித்தார். சக கத்தோலிக்க மதத்துறவிகள் போப்பைப் போய்ப் பார்த்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று அவருக்கு ஆலோசனை கூறினர். ரோமுக்குப் போய் போப்பைப் பார்ப்பதுதான் வழி என்று லூதர் ரோமுக்கு தன் நீண்ட பயணத்தை ஆரம்பித்தார். அப்போது ரோமில் செயின்ட் பீட்டர் ஆலயத்தைக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார் போப். அதற்குப் பணம் சேர்ப்பதற்காக இன்டல்ஜன்ஸ் (Indulgence) என்று அழைக்கப்படும் பத்திரங்களை விற்றுக்கொண்டிருந்தார். தங்களுடைய பாவங்களைப் போக்கிக் கொள்ளுவதற்காக அதற்குரிய பணத்தைக் கொடுத்து அந்தப் பத்திரங்களை வாங்குபவர்களுக்கு பரலோகம் நிச்சயம் என்று போப் அறிவித்திருந்தார். இதனால் அந்தப் பத்திரங்கள் அதிகம் விற்றுக்கொண்டிருந்தன. போப்புக்குப் பணமும் பெருகிக்கொண்டிருந்தது.

ரோமுக்கு வந்து இதையெல்லாம் பார்த்த மார்டின் லூதருக்கு சொல்ல முடியாத ஆத்திரம் வந்தது. ஆத்மீக விடுதலையை நாடிக்கொண்டிருந்த லூதர் கர்த்தரின் பெயரில் கத்தோலிக்க மதமும், போப்பும் செய்து வந்த அநியாயங்களை உணர்ந்து இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்று தீர்மானித்தார். உடனடியாக விட்டன்பேர்கிற்கு திரும்பிய லூதர் வேதத்தை ஜெபத்தோடு வாசிக்க ஆரம்பித்தார். கர்த்தரின் ஆவி அவருடைய உள்ளத்தில் கிரியை செய்து கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலன்களை அவர் விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும்படி செய்தது. ஆத்மீகக் கண்கள் திறக்கப்பட்டு இயேசுவின் அன்பை ருசிபார்த்த லூதர் கத்தோலிக்க மதத்தின் சுயரூபத்தை வெளிப்படுத்த தீர்மானித்தார்.

1517ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள் விட்டன்பேர்க் திருச்சபைக்கட்டடத்தை நோக்கி வீராப்போடும், நிமிர்ந்த நெஞ்சோடும், கூரிய பார்வையோடும், கால்கள் தரையில் அதிர ஒரு உருவம் கையில் ஒரு சுருளை எடுத்துக்கொண்டு நடந்து போய்க்கொண்டிருந்தது. ரோமன் கத்தோலிக்க மதத்தின் போலித்தனத்தை 95 தலைப்புகளில் அந்தச்சுருளில் விளக்கி திருச்சபைக் கதவில் பதிக்க அஞ்சா நெஞ்சனாய் உறுதியோடு நடந்து போய்க்கொண்டிருந்தார் மார்டின் லூதர். லூதர் அன்று செய்யப் போகிற காரியம் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படப் போகிற காரியமாக இருந்தது. ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஆதிக்கம் வேரோடு நிலத்தில் வீழ்வதற்கு அடியெடுத்து வைத்த நாளாக அது இருந்தது.

அந்தக் காலத்தில் பொது மக்களுக்கு ஏதாவதொரு முக்கியமான காரியத்தை எவரும் தெரியப்படுத்த வேண்டுமானால் இப்படித்தான் செய்வார்கள். இன்றைக்கு நாம் காகிதத்தில் எல்லா விஷயங்களையும் அச்சிட்டு தெரியப்படுத்துகிறோம். அன்று திருச்சபைக் கதவில் எழுதப்பட்டிருப்பதை வாசித்தே மக்கள் முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொள்வார்கள். மார்டின் லூதர், “சத்தியத்தின் மேல் வைத்திருக்கும் அன்பினாலும், சத்தியத்தைக் குறித்த வைராக்கியத்தினாலும், சத்தியம் பற்றிய இந்த 95 உண்மைகளை ஆராய பொதுமக்களாகிய உங்களை நான்

அழைக்கிறேன். விட்டன்பேர்க் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் மார்டின் லூதராகிய நான் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளும் படி உங்களை அழைக்கிறேன். கலந்துகொள்ள முடியாதவர்கள் எனக்கு கடிதம் மூலம் தயவு செய்து தெரியப்படுத்தவும்" என்று அதில் எழுதியிருந்தார். படித்த மேதைகளும், பொது மக்களும் கலந்துகொண்டு சத்தியம் பற்றிய உண்மைகளை விவாதித்து அந்த விவாதத்தின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுகளால் 1517ல் வரலாற்றை மாற்றி அமைத்த சீர்திருத்தவாதம் தோன்றியது.

1517ல் சபை சீர்திருத்தம் நடப்பதற்கு ஏதுவான காரியங்களும் அதற்கு முன்பே நடக்க ஆரம்பித்திருந்தன. திருச்சபை சீர்திருத்தம் திடீரென விண்ணிலிருந்து இறங்கி ஒரே நாளில் இந்த உலகத்தில் நிகழ்ந்து விடவில்லை. திருச்சபை சீர்திருத்தம் ஏற்படுவதற்கு ஏதுவான காரியங்களைக் கர்த்தர் உலகில் ஏற்கனவே நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஜோன் ஹஸ், ஜோன் விக்கிளிப் போன்றோர் ஏற்கனவே சத்தியத்துக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். சத்தியத்திற்காக உயிர்ப் பலி கொடுத்தனர். ஆனால், 1517ல்தான் மார்டின் லூதர் மூலமாக சீர்திருத்தம் உருவெடுத்தது. 488 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த அந்த நிகழ்ச்சியை நாம் ஏன் நினைத்துப் பார்க்க வேண்டும். அதில் நாம் ஏன் அக்கறைகாட்ட வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு நான் நிச்சயம் பதிலளிக்க வேண்டியது அவசியம்.

கிறிஸ்தவம் வரலாற்றில் தோன்றிய வாழ்க்கை நெறி. கர்த்தர் வரலாற்றின் தேவனாக இருக்கிறார். கிறிஸ்தவத்தின் வரலாறே உலக வரலாறு. தேவன் மனிதனைப் படைத்து அவனுக்கு இரட்சிப்பை எப்படி அளித்தார் என்றும், இறுதி இரட்சிப்பை நோக்கி அவனை எவ்வாறு வழிநடத்திச் செல்கிறார் என்பதையுமே வரலாற்றில் காண்கிறோம். அந்த வரலாற்றில் இரட்சிப்பைக் குறித்து எழுந்த போராட்டத்தின் ஒரு அங்கமே 16ம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதம். ஆகவே, வரலாற்றை நாம் புறக்கணிக்க முடியாது. வரலாறு தெரியாமல் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் உயர முடியாது. மொத்தத்தில் வரலாறறியாத கிறிஸ்தவம் என்றொன்றில்லை. மார்டின் லூதர் 488 வருடங்களுக்கு முன்பு விட்டன்பேர்கில் அதிரடியாக செய்த காரியம் கிறிஸ்தவத்தின் ஒரு அங்கம் மட்டுமல்ல ஒவ்வொரு விசுவாசியையும் பாதிக்கின்ற வரலாற்று நிகழ்ச்சி. அதை அறியாமல் இருக்கின்ற விசுவாசி தன் வாழ்க்கையில் கர்த்தரின் ஆசீர்வாதங்களை அறியாமல் வாழ்ந்து வருகிறான். பாவிகளின் விடுதலைக்காக கர்த்தர் வரலாற்றில் செய்த மகா அற்புதத்தை அறியாமல் வாழ்ந்துவருகிறான். வரலாற்றில் உருவெடுத்த சீர்திருத்தவாதத்தை அறிவுபூர்வமாக அறிந்திருந்து அதை நினைவுகூருகிற விசுவாசி உணர்வுபூர்வமாக சத்தியத்தில் உறுதியோடுவளர்ந்து, தன் விசுவாசத்தைப் பாதுகாத்துக்கொண்டு, சத்தியத்துக்காக எதையும் செய்யத் தயங்காதவனாக வளருவான். இப்படிப்பட்ட விசுவாசியாக நாம் தொடர்ந்து வளரவும், வருங்கால சந்ததிக்கு வழிகாட்டவும் 488 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அந்த சம்பவத்தை நினைவுகூருவதும், அதன் பலாபலன்களை நமது நினைவலைகளில் சுவைத்துப் பார்ப்பதும் அவசியம்.

உலகம் முழுவதும் இருக்கின்ற சீர்திருத்த திருச்சபைகள் வரலாற்றில் நிகழ்ந்த அந்த நாளை வருடந்தோறும் நினைவுகூருவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. அதை விழாவாகவோ, சடங்காகவோ அவர்கள் கொண்டாடுவதில்லை. இதயபூர்வமாக அந்நாளில் கிறிஸ்தவத்தின் விடுதலைக்காக அவர்கள் கர்த்தருக்கு நன்றி கூறுவார்கள். இளம் சந்ததிக்கு அந்த விடுதலையை எடுத்து விளக்குவார்கள்.

1517ம் வருடம் மனிதன் வேதத்தைத் தன்னுடைய சொந்த மொழியில் வாசிக்க வழியேற்படுத்திக் கொடுத்த வருடம். அன்று சபை சீர்திருத்தம் இந்த வருடத்தில் ஆரம்பித்திருக்காவிட்டால் இன்றைக்கும் மனிதன் கண்ணிருந்தும் குருடனாக இரட்சிப்பின் வழியை அறியமுடியாமல் இருந் திருப்பான். ரோமன் கத்தோலிக்க மதம் அந்தளவிற்கு மனிதனின் கண்களை குருடாக்கி, இருதயத்தைப் பாழாக்கி, சடங்குகளுக்கு அவனை அடிமையாக்கி கர்த்தரை அறிந்துகொள்ள முடியாமல் செய்து வைத்திருந்தது. அந்த அடிமைத் தளையிலிருந்து மனிதனுக்கு விடுதலை கொடுப்பதற்கு கர்த்தர் எழுப்பிய மனிதன் மார்டின் லூதர். 1517ம் வருடத்தில் லூதர் மாபெரும் செயலைச் செய்தார். மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்து ஆத்மீக விடுதலை அடைந்த லூதர் ரோமன் கத்தோலிக்க மதத்தின் சுயரூபத்தைத் தோலுரித்துக் காட்டப் புறப்பட்டார். வேதத்தை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். அச்சகங்கள் உருவாகி மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்த அந்தக் காலத்தில் மக்கள் வாசிக்கும்படியாக வேதம் ஜெர்மானிய மொழியிலும் ஏனைய மொழிகளிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. லூதரின் சீர்திருத்தக் கருத்துக்களும் எழுத்தில் அச்சாகி மக்களின் கரத்தை சென்றடைந்தன. இவ்வாறு சபை சீர்திருத்தம் உருவாகியது. ரோமன் கத்தோலிக்க மதத்தின் அட்டூழியங்களுக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. கிறிஸ்தவ விடுதலைக்கு அடிக்கல் நடப்பட்டது.

## சீர்திருத்தவாதத்தை ஏன் நினைவுகூருவது அவசியம்?

1517ல் நிகழ்ந்த அந்த அற்புத எழுப்புதலாகிய திருச்சபை சீர்த்திருத்தத்தை இந்த இருபத்தோராவது நூற்றாண்டில் நாம் நினைவுகூருவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

(1) சீர்திருத்தப் போதனைகளில் ஆர்வம் காட்டி அவற்றைப் பின்பற்றுகிற நாம், சீர்திருத்தவாதத்தோடு நமக்கு வரலாற்றுத் தொடர்பிருக்கிறது என்பதை ஆனந்தத்தோடு நினைவுகூர முடிகிறது. – பாரம்பரியம் என்பது நல்லதாகவும், கேடானதாகவும் இருந்துவிடலாம். ஆனால், சீர்திருத்த போதனைகளை விசுவாசிக்கின்ற நமக்கிருக்கும் வரலாற்றுப் பாரம்பரியம் சிறப்பானது. அதற்கு நாம் கர்த்தருக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டும். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கத்தாருக்கு இத்தகைய பாரம்பரியத் தொடர்பில்லை. அவர்கள் வரலாற்றை அலட்சியப்படுத்து கிறார்கள். 20ம் நூற்றாண்டுக்கு முன்பு அவர்களுடைய இயக்கத்தை நாம் வரலாற்றில் அடையாளம் காணமுடியாது. வரலாற்றில் அடையாளம் காணமுடியாததெதுவும் கிறிஸ்தவத்தின் அங்கமாக இருக்க முடியாது. கத்தோலிக்கர்களை வரலாற்றில் நாம் பார்க்கலாம். ஆனால், வரலாறு அவர்களைப் போலிமதமாக மட்டுமே தெளிவாக அடையாளம் காட்டு

கிறது. சீர்திருத்த போதனைகளை நேசித்துப் பின்பற்றுகிறவர்கள் தங்களை வரலாற்றில் அடையாளம் காணலாம். வரலாறு அவர்களை மெய்க்கிறிஸ் தவத்தின் புத்திரர்களாகக் காட்டுகிறது. முதலாம் நூற்றாண்டு காலத்து அப்போஸ்தலர்களோடும், 16ம் நூற்றாண்டு காலத்து சீர்திருத்தவாதிக ளோடும், 17ம் நூற்றாண்டு பியூரிட்டன்களோடும் அவர்களுக்கு வரலாற்றுத் தொடர்பிருக்கிறது.

உலகத்தைப் படைத்த கர்த்தர் இந்த உலகத்தில் இஸ்ரவேலைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்தார். இஸ்ரவேலர்கள் தேவனை நிராகரித்தபோது அவருடைய திட்டங்கள் தகர்ந்துவிடவில்லை. கர்த்தர் உலகத்தின் சகல ஜாதிகளிலும் இருந்து தனது மக்களைத் தெரிந்துகொண்டார். உலகத்தில் கிறிஸ்துவின் சபையை நிறுவி னார். உலக வரலாற்றோடு தொடர்புடையதாக ஆரம்பத்திலிருந்தே கர்த்தரின் கிரியைகள் இருந்திருக்கிறபோது வரலாற்றை நிராகரித்து வரலாற்றில் காணமுடியாதபடி எழுந்திருக்கின்ற இயக்கங்களை கிறிஸ்தவத்தோடு நாம் எப்படித் தொடர்புபடுத்த முடியும்? வரலாற்றில் நம்மைப் பார்க்க முடிகிறபோது, அப்போஸ்தலர்களோடும், அவர்கள் வழிவந்த சீர்திருத்தவாதிகளோடும் நமக்கிருக்கின்ற தொடர்பைப் பார்க்கின்றபோது சீர்திருத்த கிறிஸ்தவர்களாகிய நாம் நமது அருமைப் பாரம்பரியத்திற்காக கர்த்தருக்கு நன்றிகூற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதேவேளை, நம் காலத்தில் தமிழினத்தில் சீர்திருத்த சபைகள் விரல்விட்டு எண்ணக்கூடியதாக இருப்பதைப் பார்த்து நாம் வருந்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். வெறும் உணர்ச்சிகளுக்கு தன்னை ஆட்படுத்திக் கொண்டு தமிழினம் போகும் வழிதெரியாமல் தறிகெட்டு நிற்பது சீர்திருத்த விசுவாசிக்கு கவலை தர வேண்டிய காரியம். நமது பாரம்பரியத்திற்காக கர்த்தருக்கு நாம் நன்றி கூறுகிற அதேவேளை, இருண்ட காலத்தில் இருந்து வருகிற தமிழினத்தில் சீர்திருத்த விடிவெள்ளி தோன்ற நாம் அன்றாடம் ஜெபித்து உழைக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

(2) நமக்கென்று ஒரு வரலாற்றுப் பாரம்பரியமிருப்பதை உணர்ந்து அதற்காகப் பெருமைப்பட்டு கர்த்தருக்கு நன்றி கூறுவது மட்டுமல்லாமல் இன்னொரு பொறுப்பும் நமக்கிருக்கின்றது. 16ம் நூற்றாண்டில் கத்தோலிக்கத்தின் பிடி இறுகி மக்கள் திணறிக்கொண்டிருந்தபோது, வேதத்தை வாசிக்கமுடியா மலும், கர்த்தரை அறிந்துகொள்ள முடியாமலும் தவித்துக் கொண்டிருந்த போது, விக்கிளிப்பும், ஹஸ்ஸூம், லூதரும், கல்வினும், நொக்ஸூம் சுகமாக சும்மாயிருந்துவிடாமல் தாங்கள் வாழ்ந்த காலத்தில் கர்த்தருக்காக செய்ய வேண்டிய பணிகளைக் கருத்தோடு செய்தார்கள். உயிரைப் பணயம் வைத்து உழைத்து வேத சத்தியங்களின் அடிப்படையில் சபைகள் அமையவும், ஆத்து மாக்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளவும் வழிவகுத்தார்கள். அவர்களில் பலரை எதிரிகள் உயிரோடு கொளுத்தியபோதும் சத்திய வெறி அவர்களை மனிதப் பதர்களுக்கு அடிமையாக இருக்கவிடவில்லை. இருட்டில் இருக்கும் தமிழினத்தில் பிறந்து சத்தியத்தை அறிந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றிருக்கும் நாமும் சீர்திருத்தவாதிகளைப் போல நம் காலத்தில் செய்ய

வேண்டிய பணிகள் அநேகம் உண்டு. எதிரிகள் எத்தனை பேர் முளைத்தாலும், எதிர்ப்புகள் எந்தப் பக்கத்தில் இருந்து வந்தாலும் உயிரைக் கொடுத்து சத்தியத்திற்காக உழைக்க வேண்டிய பணி நமக்கிருக்கின்றது. இருட்டே சுகம் என்று கண்ணிருந்தும் குருடர்களாக இருந்து வருபவர்களை கர்த்தரின் துணையோடு பிசாசின் கரத்தில் இருந்து விடுவிக்க வேண்டிய பெரும்பணி நமக்கிருக்கின்றது.

சத்தியம் ஒரு ஆத்துமாவின் இருதயத்தில் வாஞ்சையையும், வெறியையும் ஏற்படுத்தும். ஏனெனில் அது கர்த்தருடைய சத்தியம். அத்தகைய சத்திய வாஞ்சையுள்ளவர்களே தேவனுடைய மனிதர்கள். இன்று நம்மினத்தில் தேவனுடைய மனிதர்களாக அடையாளங்காட்டிக் கொண்டு நடனமாடுகிறவர்களும், அல்லேலூயா கோஷம் போடுகிறவர்களும் சத்திய வாஞ்சையற்றவர்கள். சத்திய வெறி கொண்டவர்கள் சத்தியத்தின்படி வாழ்வது மட்டுமன்றி, அதை வளர்க்கவும், பாதுகாக்கவும் உயிரையும் கொடுப்பார்கள். லூதர் சீர்திருத்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது அவருடைய உயிருக்கு பேராபத்து காத்திருந்தது. அதேபோல்தான் கல்வினும், நொக்ஸும் ஆபத்தை எதிர்கொண்டார்கள்; சத்தியத்திற்காக உழைத்தார்கள். அதையே ஒரு மெய்யான சீர்திருத்தவாதி இன்றைய காலகட்டத்தில் தமிழினத்தில் செய்வான்.

**சீர்திருத்தவாதத்தின் தூண்கள்**

நமது சீர்திருத்தவாதப் பாரம்பரியத்திற்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருப்பதற்கும், நம்காலத்தில் நம்மினத்தின் மத்தியில் சபை சீர்திருத்தத்திற்காக உழைப்பதற்கும் அவசியமான சீர்திருத்தவாதத்தின் தூண்களான சத்தியங்களில் நமக்குப் பரிச்சயம் இருப்பது அவசியம். இந்தத் தூண்கள் ஐந்தாகும்: (1) வேதம் மட்டுமே (2) கிருபை மட்டுமே (3) கிறிஸ்து மட்டுமே (4) விசுவாசம் மட்டுமே (5) கர்த்தரின் மகிமை மட்டுமே என்பவையே.

**பின்-நவீனத்துவம்!**

*உனக்குப் பிடித்ததை நீ செய்*
*எனக்குப் பிடித்ததை நான்*
*செய்கிறேன்*
*இதில் எது சரி, தப்பு என்பதற்கு*
*இடமேயில்லை*
*அவரவருக்கு எது சரியோ*
*அதற்குப் பெயர்தான் 'உண்மை'*
*அதற்கு வெளியில் எல்லாமே பொய்*
*என்றான்*
*நேற்றுத்தான் மேல்நாட்டில் இருந்து*
*திரும்பிய தமிழ்ச்செல்வன்*
*இதற்குப் பெயர்தானாம்*
*பின்-நவீனத்துவம்!*

இந்த ஐந்திற்கும் ரோமன் கத்தோலிக்க மதம் அன்று இடம் கொடுக்கவில்லை. 11ம் நூற்றாண்டில் போப் போனிபேஸ் என்ற எட்டாவது போனிபேஸ் பின்வருமாறு கூறினார்: "ஒவ்வொரு மனிதனும் இரட்சிப்பை அடைவதற்கு போப் மிகவும் அவசியம். இதுவே கத்தோலிக்க மதத்தின் போதனை" என்று கூறி போப் போனிபேஸ் அதை அதிகாரபூர்வமான அறிக்கையாக வெளியிட்டு மக்கள் பின்பற்றும்படிச் செய்தார். மனிதன் தன்னுடைய இரட்சிப்புக்கு போப்பில் தங்கியிருக்கிறான் என்பது தான் அன்றும் இன்றும் கத்தோலிக்க மதத்தின் போதனை. கத்தோலிக்க மதம் தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டதல்ல. தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொள்ளாத இரட்சிப்பு பற்றிய போதனைகள் பிசாசின் போதனைகள் என்பதை சொல்லிப் புரியவைக்க வேண்டிய அவசியமில்லை.

## 1. வேதம் மட்டுமே

பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்பு பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்க மதம் வேதத்தை நிராகரித்து சாதாரண மனிதர்கள் அதை வாசிக்க முடியாதபடி செய்திருந்தது. நடைமுறைக்குப் பொறுத்தமில்லாத வகையில் இலத்தீன் மொழியில் மட்டுமே வேதம் அன்று எழுத்தில் இருந்தது. அதை வாசிப்பதற்கும், விளங்கிப் பயன்படுத்துவதற்கும் கத்தோலிக்க மதம் இடங் கொடுக்காததோடு, அவ்வாறு செய்பவர்களுக்கு கடுந்தண்டனையையும் கொடுத்தது. மக்கள் கத்தோலிக்க மதச் சடங்குகளைப் பின்பற்றி தங்களுடைய பாவ விடுதலைக்கு போப்பிலும், சடங்குகளிலும் தங்கியிருக்கும்படி வழிநடத்தப்பட்டார்கள். நாட்டரசுகளும் போப்பின் அதிகாரத்துக்குக் கீழிருந்தன. அன்று கத்தோலிக்க மதகுருவாக இருந்த மார்டின் லூதர் இரட்சிப்பை அடையாமலேயே, வேதத்திற்கு விளக்கங் கொடுக்கும் கத்தோலிக்க மதவிரிவுரையாளராக விட்டன்பேர்கில் பணிபுரிந்து வந்தார். கர்த்தர் அவரோடு ஆவியின் மூலம் பேச ஆரம்பித்தபோது லூதர் சிந்திக்க ஆரம்பித்தார். தன் பாவத்திலிருந்து விடுதலை அடைவதற்கான வழிகளை நாட ஆரம்பித்தார். தான் யார்? என்பதை அறிந்து கொள்ளத் துடித்தார். வேதத்தை பல மணிநேரங்களாகப் படித்தார். தன் பாவத்தைப் போக்கிக் கொள்ள அரும்பாடுபட்டார். சக கத்தோலிக்க மத குருமார்களும், போப்பும் காட்டிய வழிகள் அவருக்கு உதவவில்லை.

தொடர்ந்து வேதத்தை ஜெபத்தோடு ஆராய்ந்து படித்தபோது கர்த்தர் லூதரின் கண்களைத் திறந்தார். மனந்திரும்பி கிறிஸ்துவை தன்னுடைய இரட்சிப்பிற்காக விசுவாசித்தார். அன்றிலிருந்து கத்தோலிக்க மதத்தின் போலித்தனத்தை அவர் அடையாளங் கண்டுகொண்டார். அம்மதத்திற்கெதிராக அவர் 95 உண்மைகளை எழுதி மக்கள் முன் வைத்தார். மேலும் அத்தகைய போதனைகளை எழுத்தில் வடித்து அச்சிட்டு விநியோகித்தார். மக்கள் ஆதரவு அவருக்குப் பெருகத் தொடங்க போப்பும், நாட்டரசனும் அவரை இது பற்றி விவாதிக்க ஒரு கூட்டத்துக்கு அழைத்தனர். அவர் எழுதியவற்றையெல்லாம் நிராகரிக்கும்படியும், போப்பிடம் மன்னிப்புக் கேட்கும்படியும் அறிவுறுத்தினர். லூதர், தன்னுடைய மனச்சாட்சி வேதத்திற்கு கட்டுப்பட்டிருப்பதாகக் கூறி மனச்சாட்சியை மீறுவது

பாதகமானது என்று பதிலளித்தார். கர்த்தர் பலநாட்டு இளவரசர்களைப் பயன்படுத்தி லூதருக்கு எந்த ஆபத்தும் வராது காப்பாற்றினார். அன்றிலிருந்து சீர்திருத்தம் சுனாமி வேகத்தில் பரவ ஆரம்பித்தது.

வேத போதனைகளுக்கு மட்டுமே அடிபணிவேன் என்று அறைகூவ லிட்ட லூதர் கத்தோலிக்க மதம் வேதத்தைக் குழி தோண்டிப் புதைத் திருப்பதைத் தோலுரித்துக் காட்டினார். அதனால்தான் சீர்திருத்தவாதம் வேதத்தை எப்போதும் முன்னிறுத்துகிறது. இரட்சிப்புக்கும், பரிசுத்த வாழ்க்கைக்கும், சபை அமைப்புக்கும், வாழ்க்கைக்கும் வேத போதனைகளே அடிப்படையாக இருக்க வேண்டும் என்றும் அவற்றிற்கு மட்டுமே அடி பணிந்து நடக்க வேண்டும் என்றும் சீர்திருத்தவாதிகள் போதித்தனர். வேத போதனைகளோடு எதையும் சேர்க்கவும் கூடாது, அவற்றை திரிபுபடுத்திப் போதிக்கலாகாது, அவற்றை நிராகரிக்கக்கூடாது என்பது சீர்திருத்த வாதத்தின் ஆணித்தரமான போதனை.

இன்றைக்கு தமிழினத்தில் வேதத்திற்கு இடமில்லை. பிள்ளையார் சிலையை அகற்றிவிட்டு அந்த இடத்தில் இயேசுவை வைத்துக்கொண்டு இந்துக் கலாச்சார, பண்பாட்டின் அடிப்படையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறது தமிழ் கிறிஸ்தவம். பெயரளவில் மட்டுமே தமிழினத்தில் கிறிஸ்து தேவனாக இருக்கிறார். ஆத்துமாக்களுடைய வாழ்க்கை கிறிஸ்து வின் போதனைகளின் அடிப்படையில் நடப்பதில்லை. கிறிஸ்து போதிக்கும் சபை அமைப்புக்கும், சபை வாழ்க்கைக்கும் அங்கு இடமில்லாமல் இருக் கிறது. கிறிஸ்துவில் வைராக்கியமுள்ளவர்களை நம்மத்தியில் இன்று காண முடியாமலிருப்பதற்குக் காரணம் வேத அறிவு அநேகருக்கு இல்லாமலிருப் பதுதான். சத்தியத்தில் வளருகிறபோதுதான் நம் மனச்சாட்சி அதற்கு அடி பணிய முடியும். சத்தியம் தெரியாதிருக்கும்போது மனச்சாட்சி உலகத்துக் கும், புறஜாதிப் பண்பாட்டிற்கும் மட்டுமே அடிபணிய முடியும். உலகத்து க்கு அடிமைப்பட்டவர்களாக வாழ்ந்து கிறிஸ்துவின் பெயரை மட்டும் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்கள் மெய்க் கிறிஸ்தவர்களல்ல; அவர்களால் சத்தியத்துக்கு அடிபணிய முடியாது. இத்தகைய மோசமான போலித் தனமான சூழ்நிலையில் வேதம் மட்டுமே என்று ஆணித்தரமாகப் போதித்து அதன் வழி நடக்கும் நெஞ்சுரமிக்க சீர்திருத்தவாதிகள் நம்மத்தி யில் தேவைப்படுகிறார்கள். லூதரைப் போலவும், கல்வினைப் போலவும், நொக்ஸைப் போலவும் தைரியசாலிகள் தேவைப்படுகிறார்கள்.

## 2. கிருபை மட்டுமே

கத்தோலிக்க மதம் சபை மூலமே ஆத்துமாக்களுக்கு கிருபை கிடைக்கிறது என்று போதித்தது. போப்பும் அதைக் கொடுக்கக் கூடியவராக இருக்கிறார் என்றது. மனிதனால் மனிதனுக்கு கிருபையை அளிக்க முடியாது என்றார் லூதர். சீர்திருத்தவாதிகள் கிருபை தேவனிடமிருந்து கிடைப்பதாகவும் அதை எந்த ஒரு மனிதனும் சக மனிதனுக்கு வழங்க முடியாது என்றும் போதித்தனர் (எபேசியர் 2:8-10). எந்தவொரு சடங்குகள் மூலமாகவும், ஆசாரியன் மூலமாகவும், கர்த்தரின் பிரதிநிதியாக போலியாக தன்னை அறிவித்துக் கொள்ளும் போப்பின் மூலமாகவும் எவருக்கும் கிருபை

கிடைப்பதில்லை என்றனர் சீர்திருத்தவாதிகள்.

மனிதன் பாவத்தில் விழுந்தபிறகு ஆத்மீக நன்மைகளை செய்யக்கூடிய தன்மையை இழந்துவிட்டான் என்கிறது வேதம். கத்தோலிக்க மதமும் மனிதன் நன்மையான கிரியைகளை செய்து அதன்முலம் பரலோக வாழ்வை அடைய முடியும் என்கிறது. கிரியையின் அடிப்படையில் கிறிஸ்துவை அடைய முடியாதென்கிறது வேதம். இதனால் சீர்திருத்த வாதிகள் கிருபை மட்டுமே என்ற தத்துவத்தை வலியுறுத்தினர். அதாவது பரிசுத்த ஆவியின் செயலால் தேவ கிருபையால் மட்டுமே பாவத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும், கிரியைகளால் அதைப் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் போதித்தனர். கத்தோலிக்க பாரம்பரியங்களையும், சடங்குகளையும் அவர்கள் முற்றாக நிராகரித்தனர்.

இன்று மனிதனின் வல்லமையிலும், ஞானத்திலும் உலகம் அதிக நம்பிக்கை வைத்து செயல்பட்டு வருகின்றது. பெலேஜியனிசமும், ஆர்மீனிய னிசமும் ஆத்மீக விடுதலைக்கு மனிதனின் கிரியைகளில் பெருநம்பிக்கை வைக்கின்றன. சார்ள்ஸ் பினி மனிதன் தன்னுடைய பலத்தால் கர்த்தரைக் கட்டுப்படுத்தி இரட்சிப்பை அடைய முடியும் என்று போதித்திருக்கிறார். இன்று மனிதனின் கிரியைகளில் நம்பிக்கை வைத்தே பெரும்பாலான இடங்களில் சுவிசேஷ செய்தி கொடுக்கப்படுகிறது. சீர்திருத்தவாதத்தின் தூண்களில் ஒன்றான கிருபை மட்டுமே என்ற போதனையை இன்று நாம் வலியுறுத்திப் போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### 3. கிறிஸ்து மட்டுமே

சீர்திருத்தவாதம் கிறிஸ்து மட்டுமே என்று வலியுறுத்தியதற்கான காரணத்தை நம்மால் புரிந்துகொள்வது கடினமாக இருக்காது. வெறும் சதையும், இரத்தமும் கொண்ட மனிதப்பிறவியான போப் தன்னைக் கடவுளைப்போலக் கருதி உலகில் நடந்துகொண்டதோடு ஆத்துமாக்களின் பாவநிவாரணத்துக்கு தானும் காரணமாக இருப்பதாக எண்ணிச் செயல்பட்ட காலசூழ்நிலையில் தங்களுடைய பாவ நிவாரணத்துக்கு மனிதர்கள் கிறிஸ்துவில் மட்டும் வைக்க வேண்டிய விசுவாசத்தை லூதரும், சீர்திருத்தவாதிகளும் ஆணித்தரமாக வலியுறுத்தினர். மனிதனுடைய பாவநிவாரணப்பலியாக கிறிஸ்து சிலுவையில் மரித்து, பாவிகளின் இரட்சிப்பிற்கான அனைத்தையும் செய்து முடித்துவிட்டபிறகு மனிதன் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கும் என்கிறது வேதம். ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை கிறிஸ்துவில் ஒருவன் வைக்கும் விசுவாசமே அவனுக்கு நித்திய ஜீவனைப் பெற்றுத் தரும். இந்தப் போதனைக்கு எதிர்மாறாக இருந்தன கத்தோலிக்க மதப் போதனைகள்.

சடங்குகளிலும், சபையின் பாரம்பரியத்திலும், அளவற்ற சுய நற்கிரியை களிலும், போப்பிலும் வைக்கும் நம்பிக்கையும், விசுவாசமுமே ஒருவரைப் பரலோகத்துக்கு தகுதியாக்குகிறது என்ற கத்தோலிக்க மதப்போதனையை சீர்திருத்தவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். இன்று இதேவிதமாக

கத்தோலிக்க மதம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதேபோல நற்கிரியைகளிலும், மனிதனின் சுயத்திலும் நம்பிக்கை வைத்து இரட்சிப்பு வழிகாணும் போதனைகளும் நம்மினத்தில் அதிகமாக இருந்து வருகின்றன. இந்துமதத்திலும், திராவிட மதங்களிலும் இறைவனைக் காணும் பித்தலாட்டங்களும், கனவுகளின் மூலமும், தரிசனங்களின் மூலமும் கர்த்தரைக் கண்டடையும் முயற்சிகளும் கர்த்தர் நம்முடைய இரட்சிப்புக்காகக் தந்துள்ள சுவிசேஷத்தை நிராகரிக்கின்றன. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் தன்மையை சரிவரப் விளங்கி, அவர் மூலம் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கும் என்ற விசுவாசமில்லாதவர்கள் ஒருபோதும் கர்த்தரைக் கண்டடைய முடியாது என்பது இன்று பிரசங்கிக்கப்பட வேண்டிய சத்தியமாகும். கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் கர்த்தரின் கிருபையைத் தவிர வேறு எதுவும் மனிதனுக்குத் தேவையில்லை என்ற சுவிசேஷ செய்தியை விசுவாசிக்காதவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. கிறிஸ்து மட்டும் என்ற சீர்திருத்தவாதத்தின் இந்த மூன்றாவது தூண் இன்று நம்மினத்தில் தெளிவாகப் போதிக்கப்பட வேண்டும்.

### 4. விசுவாசம் மட்டுமே

இதுவரை நாம் பார்த்து வந்துள்ள மூன்று தூண்களாகிய சத்தியங்களோடு இணைந்த அவசியமான இன்னுமொரு சத்தியம் விசுவாசத்தின் மூலம் மட்டுமே நீதிமானாகுதல் என்பதாகும். சீர்திருத்த வாதம் இதையும் வலியுறுத்தியது. இதற்குக் காரணம் ரோமன் கத்தோலிக்க மதம் தன்னுடைய சபை மூலம் மட்டுமே ஒருவன் நீதிமானாக முடியும் என்று போதித்தது. அதாவது ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்து அதன் சடங்குகளில் தங்கியிராதவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசம் கிடையாது என்று போதித்தது. மார்டின் லூதர் ரோமர் நிருபத்தில் பவுலின் போதனையான ஆரம்பமுதல் கடைசிவரை விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்படுகிறான் என்ற சத்தியத்தை ஆணித்தரமாக பிரசங்கித்தார். மனந்திரும்புகிற பாவி தேவ கிருபையால் விசவாசத்தினூடாக மட்டுமே கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்படுகிறான் என்பது சீர்திருத்தவாதத்தின் நான்காவது தூணாகும்.

கிறிஸ்துவின் சிலுவைப் பலியை ஏற்றுக்கொண்ட கர்த்தர் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை கிறிஸ்துமேல் அவர்கள் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில், கிறிஸ்துவின் நீதியை அவர்கள் கணக்கில் வைத்து நீதிமான்களாக அவர்களை அறிக்கையிடுகிறார். விசுவாசிகள் கிறிஸ்துவில் நீதிமான்களாகவே கர்த்தரால் கணிக்கப்படுகிறார்கள். மனித கிரியைகளுக்கு இங்கு இடமில்லை. விசுவாசம் மனந்திரும்புகிற பாவி களுக்கு கர்த்தர் தரும் ஈவாகும். இந்த சத்தியத்தை ரோமன் கத்தோலிக்க மதம் இன்றும் எதிர்க்கிறது. இந்த சத்தியத்தில் அநேக சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் குழப்பம் இருந்து வருகிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைப் போதனையயான இதில் மாற்றங்களைக் கொண்டுவர பலர் முயன்று வருகிறார்கள். அது வீணான முயற்சி. அநேகர் வேதம் போதிக்கும் நீதிமானாக்குதல் சத்தியத்தை விளங்கிக் கொள்ளாமல் தங்களுக்குப் பிடிக்காத அம்சங்களை அதில் இருந்து அகற்றப் பார்க்கி

றார்கள். சுயத்தில் இருந்து புறப்படும் செத்த கிரியைகளில் நம்பிக்கை வைத்துப் பழகிய மானுடம் சர்வ வல்லமையுடைய கர்த்தர் இலவசமாகத் தரும் இரட்சிப்பை விரும்பாது அதைப் பெற்றுக்கொள்ள தன்னுடைய கிரியைக்கும் இடமிருக்கிறதா என்றே என்றும் அலைந்து வருகிறது.

வேத போதனையான தேவ கோபத்தை நிராகரித்தும், சிலுவை மரணத்தில் தங்களுக்குப் பிடிக்காத அம்சங்களை சுவிசேஷ செய்தியில் விளக்காமலும் மானுட இச்சைகளுக்கு ஏற்ற குழப்பமான செய்தியை சுவிசேஷம் என்ற பெயரில் இன்று அநேகர் பிரசங்கித்து வருகிறார்கள். இன்றைய சுவிசேஷ செய்தியில் நீதிமானாக்குதல் பற்றிய போதனையே விளக்கப் படுவதில்லை. இறைபோதனையற்ற இரட்சிப்பை அளிக்க முடியாத செய்திகளே இன்று சுவிசேஷம் என்ற பெயரில் உலவி வருகின்றது.

### 5. கர்த்தரின் மகிமை மட்டுமே

இரட்சிப்பு ஆரம்ப முதல் இறுதிவரை கர்த்தருடையதாக இருப்பதாலும், கர்த்தரின் மகிமையையே இலக்காகக் கொண்டிருப்பதாலும் நாம் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் அனைத்துக் காரியங்கள் மூலமும் கர்த்தரே மகிமைப்படுத்தப்பட வேண்டும். அவருடைய வார்த்தையின் அதிகாரத்துக்கு அடங்கி நடந்து, அவருக்காக வாழ்ந்து இறப்பதற்காகவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய ஆராதனை கர்த்தரின் வார்த்தைக்கு எதிராக அமைகின்றபோதும், கர்த்தரின் வார்த்தைக்கு விரோதமான அம்சங்களை ஆராதனையிலும், நம் வாழ்க்கையிலும் நாம் இணைத்துக் கொள்கிறபோதும், சபை ஊழியமும், பிரசங்க ஊழியமும் கர்த்தரின் வார்த்தையின்படி அமையாதபோதும், சுயத்தின் ஆளுகை அதிகரித்து நம்மை நாமே பெருமைபடுத்திக்கொள்ளும்படி அனைத்தையும் செய்கிறபோதும் நாம் கர்த்தரின் மகிமையை நாடாது நடந்துகொள்ளுகிறோம். எபேசியர் முதல் அதிகாரம் சிருஷ்டியில் இருந்து அனைத்தும் கர்த்தரின் மகிமைக்காகவே செயல்பட வேண்டும் என்று போதிக்கின்றது.

இன்று சபை வளர்ச்சி இயக்கத்தில் (Church growth movement) இருந்து கிறிஸ்தவ ஊழியங்களில் பெரும்பாலானவை மனிதனின் கிரியைகளிலும், சுய வல்லமையிலும் நம்பிக்கை வைத்தே செயல்பட்டு வருகின்றன. ரிக் வாரன் (Rcik Warren), ஹெரல்ட் கேம்ப்பிங் (Herold Camping) போன்ற அமெரிக்க ஊழியர்கள் கர்த்தருக்காக தங்கள் வல்லமையின் மூலம் ஆத்துமாக்கள் என்ன செய்ய முடியும் என்று விளக்குவதையே ஊழியமாகக் கொண்டு இயங்கி வருகிறார்கள். இவர்களுடைய அகராதியில் கர்த்தரின் மகிமை என்ற பதங்களுக்கு இடம் கிடையாது. இவர்கள் வழியில்தான் இன்றைக்கு கர்த்தரின் வார்த்தைக்கும், வழிகளுக்கும் இடங்கொடுக்காது கர்த்தர் அழைத்தார் என்ற போலி மயக்கத்தில் சுயத்திற்கு மகிமை தேடிக்கொள்வதற்காக அநேகர் தமிழினத்தில் ‘தனி ஊழியம்’ செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருக்கு மகிமை தேடி வாழ்கிறவர்கள் மத்தியில் ‘தனி ஊழியம்’ என்ற தம்பட்டத்திற்கே ஒருநாளும் இடமிருக்காது.

*சுவிசேஷத்தின் தன்மையை உணராது, நாம் வாழும் புறஜாதி சமுதாய நடைமுறைகளுக்கு நம்மை உட்படுத்திக் கொண்டு, மனித பயத்துக்கு இடங்கொடுத்து கர்த்தருக்கு மகிமை கொடுக்காது வாழ்ந்து வரும் முறை மாற வேண்டும். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிற வர்களும், திருச்சபைகளும், போதகர்களும், ஊழியக்காரர்களும் இன்று செய்ய வேண்டிய அவசியமான காரியம் மனந்திரும்புதலாகும்.*

*இதுவரை நாம் சீர்திருத்தவாதத்தை இந்த இருபத்தோராவது நூற்றாண்டில் ஏன் நினைவுகூர வேண்டும் என்று ஆராய்ந்திருக்கிறோம். என்றுமில்லாதவகையில் இன்றைக்கு நம்மினத்தின் மத்தியில் சீர்திருத்தத் தீ பொங்கியெழ வேண்டிய அவசியம் இருக்கின்றது. உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்க நாம் இன்னும் ஆத்மீக இருட்டில் வாழ்ந்து வருகி றோம். இறையியல் கோளாறுகளுக்கு உட்பட்டு உலகிற்கே வெளிச்சம் காட்டி வரும் சீர்திருத்த கிறிஸ்தவத்தை அறியாது குருடர்களாக வாழ்ந்து வருகின்றோம். கர்த்தரின் கிருபை நம்மை நோக்கிப் பார்க்கட்டும். நம் சமுதாயத்திலும் சீர்திருத்தத் தீ கொழுந்துவிட்டு எரியட்டும். நல்ல சபைகள் உருவாகட்டும். அதற்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யும் மனோதைரியம் கொண்டவர்களை நம்மத்தியில் கர்த்தர் எழுப்பட்டும். போலிகளை சீர்திருத்தம் சுட்டெரிக்கட்டும். அதற்காக உழைக்கவும், ஜெபிக்கவும் தயாரானவர்கள் உங்களை இனங்காட்டிக் கொள்ளுங்கள்.*

ஒரு மனிதன் தன்னைத் தானே புகழ்ந்து, “பாருங்கள், நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். அருமையான அனுபவத்தை என் வாழ்க்கையில் பெற்றிருக்கிறேன். என்னில் காணப்படும் கிறிஸ்தவ குணாதிசயங்களைப் பாருங்கள். என் பேச்சுக்கு நீங்கள் கீழ்ப்படி வீர்களானால் நீங்களும் நான் அடைந்த அனுபவத்தை அடையலாம்” என்று சொல்லுவதல்ல கிறிஸ்தவ சுவிசேஷம். நம்மில் காணப்படும் கிறிஸ்தவ குணாதிசயங்களைப் பார்ப்பதன் மூலம் எவரும் இரட்சிப்பை அடைய முடியாது. நாம் அடைந்திருக்கின்ற அனுபவங்களைப் பார்த்து எவரும் இரட்சிப்பைப் பெற முடியாது . . . ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அவர்களுக்கு நாம் பிரசங்கிக்க வேண்டும்; கிறிஸ்துவை விளக்கும் சுவிசேஷத்தைக் கேட்பதன் மூலம் மட்டுமே எவரும் இரட்சிப்பை அடைய முடியும். நீங்கள் குணமடைய விரும்பினால், ஏனைய ஆத்துமாக்கள் குணமடைய அவர்களுக்கு நீங்கள் துணை செய்ய விரும்பினால் உங்களுக்குள்ளேயே பார்த்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிடுங்கள். உங்களுடைய பாவத்தையும், அனுபவங்களையும் பார்த்துப் பாராட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு சுவிசேஷத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்.

- கிரேச்சம் மேச்சன் (Grasham Machen) -

# ஜோன் பனியனின் 'மோட்சப் பயணம்'

(**ஜெரமி வாக்கர்** (Jeremy Walker) இங்கிலாந்தில் மெயிடன்போவர் பாப்திஸ்து சபையின் போதகர்களில் ஒருவராக பணிபுரிந்து வருகிறார். இளமைப் பருவத்திலேயே சீர்திருத்தவாத, பியூரிட்டன் கோட்பாடுகளில் ஆழ்ந்த ஞானத்தைப் பெற்றிருக்கும் வாக்கர் ஜோன் பனியன் (John Bunyan) படைத்த மோட்ச பயணத்தின் (Pilgrims Progress) அருமை பெருமைகளையும் அதை நாம் ஏன் வாசிக்க வேண்டும் என்பதையும் இவ்வாக்கத்தில் விளக்குகிறார்.)

*"ஐயா இந்த விஷயத்தில் என்னுடைய முடிவு உறுதியானது. இன்று நான் சிறையில் இருந்து வெளிவந்தால் கர்த்தரின் துணையோடு நாளை மறுபடியும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பேன்" என்று தன்னை சிறையில் தள்ளிய வழக்குமன்ற நீதியரசர்களைப் பார்த்து ஜோன் பனியன் கூறிய வார்த்தைகள் இவை. தன்னுடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று தெரிந்திருந்தபோதும் பனியன் கர்த்தரின் பணியைக் கைவிட்டுவிடவில்லை. பன்னிரெண்டு வருடங்கள் சிறையில் தள்ளப்பட்டிருந்த காலங்களிலும் பனியனின் நாவு அவருடைய பேனாவின் மூலம் பேசியது. அவர் எழுதிய பல நூல்களில் குறிப்பிடத்தகுந்தது மோட்சப் பயணம்* (Pilgrims Progress).

### ஜோன் பனியன் (John Bunyan)

*நவம்பர் 1628ல் இங்கிலாந்தில் பெட்போர்ட்சயரில்* (Bedfordshire) *பிறந்தார் பனியன். அவருடைய தந்தை இரும்புத் தொழில் செய்து வந்தார். குறுகிய காலத்துக்கு மட்டுமே ஆரம்பப் பள்ளிக்கு சென்ற பனியன் அங்கே வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டார். பின்பு தந்தையின் தொழிலை செய்ய ஆரம்பித்து தான் பள்ளியில் கற்றவைகளையும் அவர் மறக்க நேரிட்டது. சிறுவயதில் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு பலதடவைகள் கனவில் அவரைப் பயமுறுத்தியபோதும் சிறுவயதிலிருந்தே அவர் ஒழுக்கக்குறைவாக நடந்து கொண்டார். கர்த்தரின் பராமரிப்பின் மூலம் அவர் மரணத்தில் இருந்து ஒரு தடவை காப்பாற்றப்பட்டார்.*

*1642ல் இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது. 1644ல் பனியனின் தாயும், சகோதரியும் மரணமடைந்தனர். அந்த வருடத்திலேயே, (பதினாறு வயதில்) பனியன் நாட்டரசனான முதலாம் சார்ள்சோடு போரிட்டுக் கொண்டிருந்த நாடாளுமன்றப் படையில் இணைந்தார். போர் காலத்திலும் கர்த்தர் அவரை மரணத்தில் இருந்து தப்பவைத்தார்.*

*1647ல் அவர் பணிபுரிந்த படை கலைக்கப்பட்டதால் மறுபடியும் தன்னுடைய ஊருக்குத் திரும்பினார் பனியன். அக்காலத்தில் அவர் திருமணம் செய்து கொண்டார். அவருடைய மாமனார் பக்திவிருத்தியுள்ள*

மனிதன். வறுமையில் இருந்தபோதும் பனியனின் மனைவி தன்னோடு இரு முக்கியமான நூல்களைக் கையோடு புகுந்த வீட்டுக்குக் கொண்டு வந்தாள். அந்த நூல்களை வாசித்ததாலும், மனைவியினுடைய பேச்சு, நடத்தை ஆகியவற்றாலும் பனியனின் மனச்சாட்சி அவரை உறுத்தத் தொடங்கியதால் வெளிப்பார்வைக்கு பக்திவிருத்தியுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தார். இருந்தபோதும் பாவத்தின் கோரத்தைக்குறித்து தான் கவலைப்படவில்லை என்று பனியன் கூறினார். மிகவிரைவில் இந்நிலை மாறி பனியன் தன் வாழ்வில் சில வருடங்களுக்கு பாவத்தின் பாவத்தை உணர்ந்து ஆழமாக வருந்தியதோடு அதிலிருந்து விடுபட்டு இரட்சிப்பை அடைய வேண்டுமென்பதை உணர்ந்தார். பெட்போர்டில் இருந்த ஒரு சுயாதீன சபைக்கு போக ஆரம்பித்த பனியன் அச்சபைப் போதகரான ஜோன் கிபோர்டின் (John Gifford) பிரசங்களால் பயனடைய ஆரம்பித்தார். பல வருடங்களுக்கு அவருடைய மனச்சாட்சியை பாவத்தின் உணர்வு குடையத் தொடங்கியது. ஆத்மீகக் கேள்விகளும், சந்தேகங்களும், கர்த்தரின் தண்டனையைக் குறித்த பயமும் அவரை வாட்டி இரட்சிப்பிற்காக அலைந்த பனியன் தான் ஏற்கனவே தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு விட்டதாக எண்ணி மருண்டார்.

திடீரென ஒரு நாள், "கர்த்தரின் நீதி பரலோகத்தில் இருக்கிறது" என்ற வார்த்தைகள் அவருடைய கண்களைத் திறந்தன. "பரலோகத்தில் பிதாவின் பக்கத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவே என் நீதி, என்னுடைய பாவகரமான சரீரம் என்னை நீதிமானாகக் காட்டவில்லை. நேற்றும், இன்றும், என்றும் கிறிஸ்துவே நீதிமானாக இருக்கிறார்" (எபிரேயர் 13:8) என்று பனியன் கூறினார். அன்றிலிருந்து தன்னுடைய பாவ விலங்குகள் கழன்றதாகவும், தன்னுடைய துன்பங்களும், சோதனைகளும் தன்னைவிட்டு அகன்றதாக வும் பனியன் சொன்னார்.

கிறிஸ்துவின் நீதியின் மூலமாக இரட்சிப்பையும், ஆழமான ஆத்மீக அனுபவத்தையும் அடைந்த பனியன் சில வருடங்களுக்குள்ளாகவே பெர்ட்போர்டின் சுயாதீன சபையில் அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளப் பட்டார். சபை வாழ்க்கையில் வளர்ந்த அவருடைய ஈவுகளைக் கவனித்த வர்கள் அவரை பிரசங்கம் செய்ய அனுமதித்தார்கள். "நான் எதை என் வாழ்க்கையில் அனுபவித்தேனோ, எந்தளவுக்கு அவற்றை ஆழமாக உணர்ந்தேனோ அதைப்போலவே பிரசங்கம் செய்தேன் என்று பனியன் கூறியிருக்கிறார். அதிகம் படிப்பறிவில்லாதிருந்தபோதும் அவருடைய பிரசங்கங்கள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அந்தக் காலத்துப் பண்பாட்டு, நாட்டு நடப்புகளின் அடிப்படையில் படிப்பறிவில்லா மனித னொருவனின் அத்தகைய பிரசங்கங்களைப் பலர் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். இரண்டாம் சார்ள்ஸ் 1660ல் அரசனாக வந்தபிறகு நாட்டின் ஆத்மீக நிலைமை மிகவும் மோசமடைந்தது.

பனியனின் முதலாம் மனைவி 1658ல் இறந்தார். 1659ல் எலிசபெத் என்ற பக்திவிருத்தியுள்ள ஒரு பெண்ணை அவர் மணந்தார். எலிசபெத்துக்கு ஏற்கனவே நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். அத்தோடு பனியனின் பிள்ளையையும் வயிற்றில் அவள் சுமந்துகொண்டிருந்த காலத்தில்

பனியனுக்கும் நாடாளுகிறவர்களுக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டது. 1649ல் இருந்து 1658வரை ஒலிவர் குரோம்வெல் (Oliver Cromwell) ஆண்டபோது பனியன் இருந்த சுயாதீன சபை போன்ற சபைகளுக்கு பிரசங்கிக்கவும், ஆராதனை செய்யவும் நாட்டில் சுதந்திரம் இருந்தது. இரண்டாம் சார்ள்ஸ் பதவிக்கு வந்தபோது அந்த சுதந்திரம் பறிக்கப் பட்டது. 1660ல் பனியனை சிறை பிடிக்க உத்தரவு கொடுக்கப்பட்டது. இருந்தபோதும் அரச உத்தரவுக்கு கீழ்ப்படியாமல் கூடியிருந்த விசுவாசிகள் மத்தியில் பிரசங்கிக்க ஜோன் பனியன் வந்தார். தங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதிய சிலர் கூட்டத்தைக் கலைத்துவிட ஆலோசனை கூறினார்கள். அதற்குப் பதிலளித்த பனியன், "நமது பணி நன்மையானது. அதைக்குறித்து நாம் வெட்கப்படத் தேவையில்லை. கர்த்தரின் வார்த்தை யைப் பிரசங்கிப்பது உத்தமமான ஊழியமாதலால், அந்தப்பணியில் நாம் துன்பப்பட்டாலும் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்" என்றார். அவர் பேசிக் கொண்டிருந்த போதே படைவீரர்கள் வேகமாக நுழைந்து அவரை சிறைப் பிடித்தனர். பின்பு சட்டபூர்வமான சபைகளில் ஆராதனை செய்யவில்லை யென்றும், சட்டவிரோதமான சபைகளில் பிரசங்கம் செய்தார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தி மூன்று மாதங்களுக்கு அவரை நாடாளுகிறவர்கள் சிறையில் தள்ளினார்கள். அதிகாரிகளின் பேச்சுக்கு அவர் இணங்காததால், அவருடைய மனைவியின் பரிதாபமான வேண்டுகோள்களையும் நிராகரித்து நாடாளுகிறவர்கள் பனியனைப் பன்னிரெண்டு வருடங்கள் சிறையில் வைத்திருந்தனர்.

சிறைவாசம் பனியனுக்கு இன்பத்தை அளிக்காதபோதும் அவர் அதை கர்த்தரின் பணிக்காகப் பயன்படுத்திக் கொண்டார். சிறைவாச காலத்தில் அவருடைய பேனாவில் இருந்து உதித்த முதல் படைப்பு அவருடைய வாழ்க்கை வரலாறே (Grace Abounding to the Chief of Sinners). அதுவே அவர் 1672ல் சிறையில் இருந்து வெளிவருமுன்பு அச்சிடப்பட்ட கடைசி நூலாக வும் அமைந்தது. சிறைவாசத்தின்போது பனியன் தொடர்ந்து தன்னுடைய சபையோடு தொடர்பு வைத்திருந்தார். அத்தோடு சிறையில் இருந்தபோதும் சபையும் அவரைத் தொடர்ந்து போதகராக நியமித்திருந்தது. சிறையில் இருந்து வெளிவந்த பின்பு பனியன் பல இடங்களுக்கு பிரயாணம் செய்து சுவிசேஷப் பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டார். ஆத்துமாக்களைக் கூட்டி ஆராதிக்கத் தூண்டினார். இதன் காரணமாக அவருக்கு 'பிஸப் பனியன்' என்ற பெயரும் சூட்டப்பட்டது. மறுபடியும் அவர் சிறைபிடிக்கப்படக் கூடிய வாய்ப்பிருந்தது. வெகுவிரைவிலேயே அதுவும் நடந்தது. 1677ல் அவர் ஆறுமாதங்களுக்கு மறுபடியும் சிறையில் தள்ளப்பட்டார். இக்காலப் பகுதியிலேயே அவர் ஏற்கனவே முதல் சிறைவாசத்தின்போது எழுத ஆரம் பித்து பல பகுதிகளை முடித்திருந்த 'மோட்சப் பயணத்தை' (Pilgrims Progress) ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். இந்நூலின் முதலாம் பாகம் 1678ல் வெளிவந்தது. அதற்குப் பிறகு அவருடைய ஏனைய நூல்களான The Life and Death of Mr. Badman (1680), The Holy War (1682) ஆகியன வெளியிடப்பட்டன. மோட்ச பயணத்தின் இரண்டாம் பாகம் 1684ல் பனியனின் வேறு பலபிரசுரங்களோடு சேர்த்து வெளியிடப்பட்டது.

பனியனுக்குகெதிராக தொடர்ந்திருந்து வந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவருடைய புகழ் எங்கும் பரவியது. அக்காலத்தில் மோட்சப் பயணம் நூல் விற்பனையில் முதலிடத்தை வகித்தது. ஜோன் பனியனின் பிரசங்கங் களை ஆயிரக்கணக்கானவர்கள் கூடிவந்து கேட்டனர். ஒரு முறை அவர் இலண்டனுக்கு வந்தபோது 1200 பேர் கடுமையான பனியையும் பொருட் படுத்தாமல் கூடி நின்று காலை ஏழு மணியில் இருந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்டனர். அக்காலத்தில் அவருடைய பிரசங்கங்களைத் தொடர்ந்து கேட்டுவந்தார் 'பியூரிட்டன்களின் இளவரசர்' என்று அழைக் கப்பட்ட ஜோன் ஓவன் (John Owen). அரசனான இரண்டாம் சார்ள்ஸ், ஜோன் ஓவனைப் பார்த்து ஒரு முறை கேட்டாராம், 'இவ்வளவு படித்த மனிதனான நீங்கள் ஒரு சாதாரண இரும்புத் தொழிலாளியின் வெறும் பேச்சைப் போய்க் கேட்பதெப்படி?' என்று. அதற்குப் பதிலளித்த ஜோன் ஓவன், 'பேரரசனே, அந்த இரும்புத்தொழிலாளியின் பிரசங்கத் திறமை மட்டும் எனக்குக் கிடைக்குமானால் என்னுடைய பாண்டித்தியம் அனைத்தையும் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறேன்' என்றார்.

1688ல் பனியன் ஒரு தகப்பனையும், அவருடைய மகனையும் சேர்த்து வைப்பதற்காக பிரெட்போர்டில் இருந்து ரெட்டிங் என்ற இடத்துக்கு பயணம் செய்தார். அந்த வேலை முடிந்தபிறகு அவர் இலண்டனை நோக்கி குதிரையில் பிரயாணம் செய்தார். இடிமுழக்கத்தோடு வந்த பெரு மழையை யும் பொருட்படுத்தாமல் அவர் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பெருமழையில் நனைந்து தோய்ந்திருந்த பனியனை ஜுரம் பிடித்தது. ஜுரத்தோடு அடுத்து வந்த ஓய்வு நாளில் அவர் பிரசங்கம் செய்தார். அவருடைய உடல் நலம் மிக வேகமாகக் குன்ற ஆரம்பித்தது. 1688ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை அவருடைய நண்பர்களில் பலர் மரணத்தை எதிர்நோக்கி படுக்கையில் இருந்த பனியனைச் சுற்றிக் கூடினர். அவரோடு சில வார்த்தைகளைப் பேசிய பிறகு அவர்கள் பனிய னைப் பார்த்து, 'நாங்கள் செய்யக் கூடியது ஏதாவது இருக்கிறதா நண்பரே!' என்று கேட்டார்கள். அவர்களைப் பார்த்து பனியன், 'சகோதரர்களே, நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடிருப்பதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்' என்று கூறி தன்னுடைய கரங்களிரண்டையும் நீட்டி, 'நான் உம்மிடத்தில் வருகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறி பரலோகத்தை நோக்கிப் பயணமானார். அவர் பன்ஹில் நிலம் (Bunhill Fileds) என்ற இடத்தில், அரசை எதிர்த்த விசுவாசிகளால் பயன்படுத்த இடத்தில் அடக்கம்பண்ணப்பட்டார். பனியன் இலண்டனுக்கு தன்னோடு கொண்டு போயிருந்த நூலான The Acceptable Sacrifice, or, The Excellency of a Broken Heart அவருடைய மரணத்திற்குப் பிறகு அவரது நண்பர்களால் வெளியிடப்பட்டது. அதற்கு சில மாதங்களுக்குப் பின்பு ஒரு பெரும் புரட்சியினால் 1689ல் இரண்டாம் சார்ள்ஸ் பதவியில் இருந்து இறக்கப்பட்டு முதன் முறையாக பனியன் தன்னுடைய வாழ்நாளில் அனுபவிக்க முடியாத மத சுதந்திரத்தை இங்கிலாந்தில் மக்கள் அனுபவிக்கும் வாய்ப்பு கிட்டியது. (இவ்வாண்டிலேயே 1689 விசுவாச அறிக்கை வெளியிடப்பட்டதென்பதை நினைவில் கொள்ள வேண்டும்).

## மோட்சப் பயணம் (Pilgrims Progress)

மோட்சப் பயணத்தின் பெரும்பகுதியை பனியன் தன்னுடைய பன்னிரெண்டு வருடகால சிறைவாசத்தின்போது எழுதினார் என்று பார்த்தோம். அவருடைய வாழ்க்கையை நாம் ஆராய்கிறபோது சில நிகழ்ச்சிகளையும், மனிதர்களையும், சம்பவங்களையும் மோட்சப் பயணம் பிரதிபலிப்பதை நம்மால் கவனிக்க முடியும். பியூரிட்டன்களைப் பிரதிபலிக்கும் புத்தகத்தின் முழுத்தலைப்பும் அதன் உள்ளடக்கத்தைப் பற்றிய விளக்கத்தைத் தருவதாக இருக்கின்றது. நாம் மோட்சப் பயணம் என்று சுருக்கமாக அழைத்தாலும் நூலின் தலைப்பு நீளமானது. அப்படி நீளமான தலைப்புக் கொடுப்பது அக்கால வழக்கம் – இந்த உலகத்தில் இருந்து அவ்வுலகுக்கு பயணமாகும் ஒரு பயணி அங்கு எப்படிப் பாதுகாப்பாகப் போய்ச்சேர்ந்தான் என்பதையும், அந்தப் பயணத்தின் ஆபத்தான தன்மைகளையும் கனவில் நிகழ்வதுபோல் உருவகமாக வெளிப்படுத்துகிறது இந்நூல். நூலின் இரண்டாம் பாகத்தின் தலைப்பு முதல் பாகத்தை ஒத்ததாக இருந்தாலும் அது பயணியின் குடும்பமும், குழந்தைகளும் அந்தப் பயணத்தில் இணைந்துகொண்டதை விளக்குகிறது.

இந்த நீளமான தலைப்பு நமக்கு நூலைப் பற்றிய அநேக விஷயங்களை வெளிப்படுத்துகின்றது. நூலின் நோக்கம் பரலோகப் பயணத்தை விளக்குவதாகும். அது, அழியும் நகரத்தில் இருந்து மோட்சப் பட்டணத்திற்கு பயணி பயணம் செய்வதை விவரிக்கிறது. இந்த நூல் உருவக மொழியில் எழுதப்பட்டு பனியனின் இலக்கியத் திறமையையும், சொல்லாட்சியையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது. ஒரு உருவகத்தில் காணப்படும் நபர்கள், சம்பவங்கள் அனைத்தும் வேறொன்றை அடையாள மொழியில் விளக்குவதாக அமைந்திருக்கும். ஒன்றை வைத்து இன்னொன்றை விளக்குவது உருவகமாகும். இந்தவிதமான மொழிநடையைப் பயன்படுத்தி சத்தியத்தை ஆத்துமாக்கள் மனதில் பதியவைக்கும்படியாக பனியன் நூலைப் படைத்திருக்கிறார். உதாரணமாக, பரலோகத்தில் இருந்து வரும் நெருப்பினால் அழியப்போகும் நகரம் இந்த உலகமாகும். விசுவாசிகள் இறுதியில் போய்ச்சேரப் போகிற நித்திய பரலோகமே மோட்சப் பட்டணமாகும்.

### நூலின் முதலாம் பாகம்

இந்நூலின் முதலாவது பாகம், பல்வேறு ஆபத்துக்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் கிறிஸ்தியான் (Christian) என்று அழைக்கப்படும் நூலின் நாயகன் அழியும் நகரத்தில் இருந்து வெளியேறி எவ்வாறு மோட்சப் பட்டணத்தை சென்றடைகிறான் என்பதை விளக்குகிறது. இந்நூலில் கிறிஸ்தியான் சென்றடைந்த இடங்கள், சந்தித்த மனிதர்கள் அனைத்தும் எங்கெல்லாம் இந்த நூல் வாசிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஆங்கில மொழியின் இலக்கிய அம்சங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நூலில் கிறிஸ்தியான் முதலில் அடையும் இடம் நம்பிக்கையிழப்பு என்ற உளையாகும் (Slough of Despond). இங்கே கிறிஸ்தியான் அநேக பயங்களுக்கும் சந்தேகங்களுக்கும் உள்ளாகும் நிலையை அடைகிறான். போகும் பாதையில் இருந்து விலகிவிடுமளவுக்கு வந்துவிட்ட கிறிஸ்தியானை விசுவாசமுள்ள நற்செய்தியாளன் (Faithful Evangelist) குறுகிய வாசலுக்கு

(Wicket Gate) வழிகாட்டுகிறான். அந்த வழியாகவே கிறிஸ்தியான் மோட்சப் பட்டணத்தை அடைய வேண்டும். அந்த வழியில் போகும்போது கிறிஸ்தியான் விளக்கம் கூறுகிறவரின் வீட்டை அடைகிறான் (House of Interpreter). அவர் கிறிஸ்தியானுக்கு அநேக அதிசயங்களைக் காட்டி அவனுடைய வழியில் அனுப்பி வைக்கிறார். அங்கிருந்து கிறிஸ்தியான் சிலுவையைக் கொண்டிருக்கும் ஒரு மலையில் ஏறுகிறான். அவ்வாறு மலையேறும்போது தன் முதுகில் இருந்த பாரமான பாவச் சுமை இறக்கப்படுவதைக் கவனிக்கிறான். இந்தக் காட்சி இலண்டனில் இருக்கும் பனியனின் கல்லறையில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதன் ஒரு பக்கத்தில் கிறிஸ்தியான் மலையேறும் காட்சியும், மறுபக்கத்தில் அவன் சிலுவையின் அருகில் வருவதையும், அவனுடைய சுமைகள் மலையின் கீழ் உருண்டோடி மறுபடியும் காணமுடியாதபடிப் போவதையும் விளக்குகின்றன.

அதற்குப் பிறகு கிறிஸ்தியான் கடினமலை (Difficulty) என்று அழைக்கப்படும் இன்னொரு மலையில் ஏறுகிறான். அங்கே சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டிருக்கும் இரண்டு சிங்கங்களுக்கு இடையில் நுழைந்து தங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் பயணி அலங்கார மாளிகையில் (Lodge) தங்கி இனி வரப்போகும் பயணத்துக்காக தன்னைத் தயார் செய்கிறான். அங்கே தன் பயணத்துக்குத் தேவையான ஆயுதங்களையும், கவசங்களையும் பெற்றுக் கொள்ளுகிறான். அவனுடைய ஆயுதங்களுக்கும், கவசங்களுக்கும் உடனடியாகவே வேலை வந்து விடுகிறது. அடுத்து அப்போலியனோடு (Apollyon - சாத்தான்) ஏற்படும் கடுமையான, நீண்ட போராட்டத்தில் கிறிஸ்தியானின் ஆயுதங்களும், கவசங்களும் சோதனைக்குள்ளாகின்றன. இப்போராட்டத்தில் கிறிஸ்தியான் பல துன்பங்களுக்கும் மத்தியில் வெற்றியடைகிறான். அதன்பின் அவனைப்போன்ற சக பயணியான உண்மையானவனை (Faithful) கிறிஸ்தியான் சந்திக்கிறான். அவர்கள் இருவரும் உலக இச்சைகளையும், இன்பங்களையும் குறிக்கும் மாயாபுரி (Vanity Fair) நகருக்குப் போனார்கள். அங்கே இருவரும் சிறைபிடிக்கப்பட்டதோடு, உண்மையானவன் கொலை செய்யப்பட்டான். கிறிஸ்தியான் அங்கிருந்து விடுதலை அடைந்து இன்னோரு நண்பனான நன்நம்பிக்கையை (Hopeful) சந்தித்து அவனோடு பயணத்தைத தொடர்கிறான். கிறிஸ்தியானுடையதும், உண்மையானவனுடையதும் சாட்சிகளைப் பார்த்தே நன்நம்பிக்கை தன் பயணத்தை ஆரம்பித்திருந்தான். அடுத்ததாக அவர்கள் இருவரும் செல்வ மலையின் (Hill Lucre) கட்டுகளுக்கு தப்பினாலும் கிறிஸ்தியானுடைய மதியீனத்தினால் வேறுபாதையில் போய் கடும் பயங்கரமான அரக்கனின் (Giant Despair) பிடியில் சிக்கி கொஞ்சக் காலத்துக்கு சந்தேகக் கோட்டையில் (Doubting Castle) வைக்கப்பட்டார்கள். மறுபடியும் அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பினார்கள். இந்தத் தடவை அவர்களுக்கு வாக்குத்தத்தம் (Key of Promise) என்ற சாவி கோட்டையில் இருந்து தப்புவதற்கு கைகொடுத்தது. அங்கிருந்து அவர்கள் மகிழ்ச்சி மலையை வந்தடைந்தார்கள் (Delectable Mountains). அங்கே அறிவு, அனுபவம், விழிப்பு, மெய்மை என்ற நான்கு மேய்ப்பர்கள் அவர்களுடைய தேவைகளைக் கவனித்துக் கொண்டார்கள். அத்தோடு அழிவற்ற நகரையும் காணும் பாக்கியத்தையும் அளித்தார்கள். அங்கிருந்து புறப்பட்ட இருவரும் வழியில் புத்தியீனனையும், நாத்திகனையும்

வேறு சிலரையும் சந்தித்தார்கள். இறுதியில் ஆனந்த நாட்டுக்குள் (Enchanted Ground) அவர்கள் இருவரும் நுழைந்தார்கள். அங்கிருந்து இளைப்பாறுதல் தரக்கூடிய பழத்தோட்டத்துக்குள் (Land of Beulah) வந்தார்கள். தங்களுடைய பயணத்தின் இறுதிக் கட்டமான மோட்சப் பட்டணத்தை அடையுமுன் அவர்கள் கடக்க வேண்டிய ஒரு கடைசித் தடை இருந்தது. அது மரண ஆறு. அந்த ஆற்றைக் கடக்காமல் மோட்ச வாயிலை அடைய வேறு வழி இல்லை. ஆற்றைக் கடப்பவர்களுடைய விசுவாசத்தைப் பொறுத்து அதன் ஆழம் மாறிக்கொண்டிருந்தது. நன் நம்பிக்கை ஆற்றை இலகுவாகக் கடந்து விடுகிறான். ஆனால், கிறிஸ்தியான் ஆரம்பத்தில் பயத்தால் நடுங்கிவிடுகிறான். நன்நம்பிக்கை தனது நண்பனுக்கு பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவன் தலையை ஆற்றின் தண்ணீருக்கு மேல் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறான். இறுதியில் கிறிஸ்தியான் கிறிஸ்துவை நினைத்து விசுவாசிக்க அவனுடைய பயங்கள் விலகிவிடுகின்றன. இரண்டு பேரும் ஆற்றைக் கடந்து மோட்சப் பட்டணத்தை அடைந்து மகிமைக்குள் வரவேற்கப்படுகிறார்கள்.

## நூலின் இரண்டாம் பாகம்

நூலின் இரண்டாம் பாகத்தில் கிறிஸ்தியானைப் போலவே அவனுடைய பாதையில் செல்கின்ற ஒரு கூட்டத்தாரைச் சந்திக்கிறோம். அக்கூட்டத்தில் கிறிஸ்தியானின் மனைவியான கிறிஸ்தீனாளையும் (Christina), அவனுடைய குமாரர்களையும், மெர்சி (Mercy) என்னும் பெயருடைய கிறிஸ்தீனாளின் இளம் நண்பியையும் சந்திக்கிறோம். கிறிஸ்தியான் ஆற்றைக் கடந்த பிறகு அவனுடைய மனைவி இந்தப் பயணத்தை ஆரம்பித்தாள். இரண்டாம் பாகத்தில், முதலாம் பாகத்தில் இலகுவாக கையாள முடியாததும், அவசியமில்லாததும் அல்லது உடனடியாக பொருந்திவராமலுமிருந்த சில அம்சங்களை விளக்க முனைகிறார் பனியன். இதைப் பற்றி விளக்கும் பனியன் “கிறிஸ்தியான் திறந்துவைக்காமல் விட்டுவிட்டுத் தன் வழியில் சென்ற பின் கிரிஸ்தீனாள் அவற்றைத் தன்னுடைய திறவுகோளால் திறந்துவைக்கிறாள்” என்கிறார். குறுகிய வாசலூடாக போவதற்கு முன்பாக இந்தப் புதிய பயணிகளும் பல தடைகளை தங்கள் வாழ்க்கையில் சந்திக்க நேர்ந்தது. அதற்குப் பிறகு அவர்கள் விளக்கம் கூறுகிறவரின் வீட்டில் சில காலங்களைக் கழித்தனர். அவர் அவர்களுடைய பயணத் துணையாக தன்னுடைய சேவகர்களில் விசுவாசமிக்க துணிபு (Great Heart) என்பவனை அவர்களுக்குப் பாதுகாப்பாகக் அனுப்பிவைத்தார். போகின்ற வழியில் துணிச்சல்காரன் கிறிஸ்தியானுடைய பயண அனுபவங்களை அவர்களுக்கு விபரித்து, வழியில் சில இடங்களைச் சுட்டிக்காட்டி அங்கு நிகழ்ந்த குறிப்பிட்ட சம்பவங்களையும் அவர்களுக்கு விளக்கிக்கொண்டு வந்தான். அத்தோடு, வழியில் பயணிகளுக்காக அவன் எதிரிகளோடு போராடி இரண்டு இராட்சதர்களான இரத்த வெறியனையும், சங்கார அரக்கனையும் (Giants Maul and Slay Good) வெட்டிச் சாய்த்தான். துணிச்சல்காரனின் மிக முக்கிய செயல்களில் ஒன்று வீண் நம்பிக்கை என்ற அரக்கனையும், அவனுடைய மனைவியான அவிசுவாசத்தையும் (Giant Despair and his wife Diffidence) கொன்றதோடு சந்தேகக் கோட்டையையும் முற்றாகத் தகர்த்ததுதான். அவர்களுடைய

*பயணத்தின்போது ஏனைய பயணிகளும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் எல்லோருமே பல இடர்களை வழியில் சந்திக்க நேர்ந்தது. கிறிஸ்தியான் போன பாதையிலேயே அவர்களும் போனபோதும் கிறிஸ்தியான் சந்தித்திராத இடர்களையும் அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அத்தோடு, மத்தேயுவுக்கும் கிரிஸ்டீனாவின் இளம் நண்பியான இரக்கத்துக்கும் இந்தப் பயணத்தின்போது திருமணமாகியது. இறுதியில் அந்தப் பெரிய கூட்டமான பயணிகள் பியூளாவுக்கு வந்து சேர்ந்து ஆற்றைக் கடக்கத் தயாரானது. ஆற்றைக் கடப்பதற்கு முன்பு பல பயணிகள் ஒருவருக்கொருவர் ஆறுதல் வார்த்தைகளையும், எச்சரிப்புகளையும் சொல்லி ஒருவரையொருவர் திடப்படுத்திக் கொண்டார்கள்.*

*இந்நூலின் இரண்டு பாகங்களிலும் நாம் அழியும் நகரத்தைவிட்டு மோட்சப் பட்டணத்தை நோக்கிப் பயணம் செய்து அந்நகரைச் சென்றடையும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்ட உலகத்தின் பல தரத்து மக்களையும் காண்கிறோம். நூலின் இந்த அற்புதமான வடிவமைப்பு பனியனுக்கு கிறிஸ்தவ வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களையும், தனி மனித அனுபவங்களை மட்டுமல்லாமல், கிறிஸ்தவ சமுதாய அனுபவங்களையும் அலசவும், விளக்கவும் பேருதவி செய்தது. நாம் மேலே பார்த்த நூலின் சுருக்கமான விளக்கம் அதன்பொதுவான அமைப்பையும், பயணிகளின் அனுபவங்களையும் விளக்க முயல்கிறது. பயணிகள் அனைவரைப் பற்றியும், அவர்களது துன்பங்கள், சோதனைகள், மகிழ்ச்சி எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை விபரமாக இந்தப் பகுதியில் ஆராய்வதற்கு இடம் போதாது.*

*இந்நூலின் பல முக்கியமான அம்சங்கள் இதை நாம் வாசிப்பதற்கு ஊக்கமளிக்கும். ஒவ்வொரு விசுவாசியும் ஏன் இந்த நூலை வாசித்தே ஆக வேண்டும் என்பதை இந்த அம்சங்கள் தெளிவாக விளக்குகின்றன.*

**(1) மோட்ச பயணத்தில் வேதத்தின் ஆளுமையைக் காண்கிறோம்.**

*மோட்சப் பயணத்தை வாசிக்கின்றபோது அதில் வேதத்தின் ஆளுமையை நம்மால் கவனிக்காமல் இருக்க முடியாது. ஜோன் பனியனின் வேத ஞானத்தையும், அதில் அவருக்கிருக்கும் பரந்த அறிவையும் மூன்று விதங்களில் நூலை வாசிக்கின்றபோது நாம் விளங்கிக் கொள்ளுகிறோம். முதலாவதாக, அதில் வேத வசனங்கள் பெருமளவுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மோட்சப் பயணம் போகும் ஒவ்வொரு பயணியும் தங்களுடைய நம்பிக்கைகளையும், அனுபவங்களையும் விளக்குவதற்காகவோ அல்லது ஏனையோருக்கு ஆறுதல் அளிப்பதற்காகவோ அடுத்தடுத்து வேத வசனங்களை நூல் முழுவதும் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். நூலின் ஆரம்பத்தில் பயணியின் முதலாவது அனுபவமாக கூறப்பட்டிருப்பது அவனுடைய வேத வாசிப்பில் அவன் கண்டுணர்ந்த உண்மைதான்: அவன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து இரட்சிப்பை நாடிப் பிலிப்பியர் சிறை அதிகாரி கதறியதுபோல், "இரட்சிப்பை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கிறான் (அப்போஸ்தலர் 16:30). அதற்குப் பிறகு பயணியின் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவனுடைய ஆத்மீகத் தேவைகளைத் தீர்த்து*

வைப்பதற்குத் தகுந்த வேத வசனங்களை நூல் முழுவதும் அவனுடைய பயணத்தின்போது பனியன் பயன்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

இந்தவிதத்தில் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் வசனங்களை விட, வேதப்புத்தகத்தோடு பரிச்சயமுள்ள வாசகன் நூலை வாசிக்கும்போது அதன் வேதம் தழுவிய போதனைகளையும் இனங்கண்டு கொள்வான். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் மோட்சப் பயணத்தைப் பற்றிக்கூறும்போது "வேதமே இன்னொரு வடிவில் நூலாயிருக்கிறது" என்று கூறியிருக்கிறார். அவர் தொடர்ந்து, "பனியன் தான் முழுமையான வேத ஞானத்தைப் பெறுமளவுக்கு வேதத்தை வாசித்திருக்கிறார். ஆகவே, நாம் மோட்சப் பயணத்தை வாசிக்கும் போது, ஆகா! இந்த மனிதன் ஜீவனுள்ள வேதமாயிருக்கிறார்." என்று சொல்லுவோம். "அவரை எந்த இடத்தில் நீங்கள் குத்தினாலும் அவருடைய இரத்தில் வேதம் உறைந்திருப்பதைக் காணலாம்; அவருடைய ஆவி முழுவதும் வேதத்தால் நிறைந்திருக்கிறது" என்றார் ஸ்பர்ஜன். நேரடியாக வேத வசனங்களைப் பயன்படுத்தாத இடங்களில்கூட அவருடைய பேனாவில் இருந்து வேத வார்த்தைகளும், பதங்களும் ஆறாகப் புறப்பட்டிருக்கின்றன. வேதத்தைப் பயன்படுத்தாமல் அவரால் எழுத முடியவில்லை.

அடுத்ததாக, பனியனுக்கு வேதக்கோட்பாடுகளில் இருந்த ஞானத்தை நாம் மறந்துவிடக்கூடாது. நூலின் இரண்டு பாகங்களிலும் அதில் நாம் சந்திக்கும் பயணிகள் தங்களுடைய விசுவாச வாழ்க்கையின் அனுபவங்களைப் பற்றி நண்பர்களோடு பேசும்போதும், அவர்களுடைய எதிரிகளோடு தர்க்கம் செய்கின்றபோதும் வேதக் கோட்பாடுகளே அவர்களுடைய சம்பாஷனைகள் முழுவதிலும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். அது பனியன் எந்தளவுக்கு வேதக் கோட்பாடுகளில் நிறைந்த ஞானத்தைக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகிறது. பனியனைப் பொறுத்தவரையில் வேதம் காலத்துக்குதவாத நூலல்ல; விசுவாசியினுடைய விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் வழிகாட்டுகின்ற அவசியமான நூல். ஜோன் பனியன் நிறைந்த இருதயத்தைக் கொண்டிருந்த வேதத்திற்கு அடிமையான சுவிசேஷக் கல்வினியக் கோட்பாடுகளை விசுவாசித்த மனிதர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. மார்டின் லூதரின் எழுத்துக்கள் அவருடைய இருதயத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. வேறு எந்த நூல்களையும்விட லூதர் கலாத்தியருக்கு எழுதிய விளக்கவுரை தன்னை மிகவும் பாதித்த நூலென்றும், காயப்பட்ட இருதயத்துக்கு இதமூட்டும் நல்ல லேகியம் அது என்றும் பனியன் கூறியுள்ளார். ஸ்பர்ஜன் சொன்னார், "வேதபூர்வமான கோட்பாடுகளுக்கு மறுபெயர்தான் கல்வினிசம்" என்று. பனியனின் மோட்சப் பயணம், இறையாண்மையும், இரக்கமும் கொண்ட கர்த்தர் தன்னுடைய கிருபையால் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினூடாகப் பாவிகளுக்கு இரட்சிப்பை அளித்து அவர்களைப் பரலோக வாழ்க்கைக்கு தயார் செய்வதை விளக்குகிறது. விசுவாசத்தின் மூலமாக மீட்பராகிய கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்குதலாகிய கோட்பாடு பனியனின் நூலில் அடிப்படைப் போதனையாக இருக்கிறது.

பனியனின் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உருவகம் முழுவதும்

வேதபூர்வமானது; அதன் சம்பவங்களும், விளக்கங்களும் வேதபூர்வ மானவை; அதன் மொழி வேதபூர்வமானது; உள்ளடக்கமானதும், வெளிப் படையானதுமான அதன் போதனைகள் வேதபூர்வமானவை. வேதத்தை விசுவாசித்து அதன் போதனைகளின்படி வைராக்கியத்தோடு வாழ்ந்து வந்த பனியனின் ஆத்துமாவை வெளிப்படுத்தும் நூலாக இருக்கிறது மோட்சப் பயணம்.

**(2). மோட்சப் பயணம் உறுதியானதும், ஜீவவல்லமையுள்ளதுமான கிறிஸ்தவத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.**

பனியன் வாழ்ந்த பதினேழாம் நூற்றாண்டுகளில் மெய்க்கிறிஸ்தவம் என்பது விளையாட்டுப்பொருளாகவோ வெறும் ஆர்வக் கோளாறாகவோ இருக்கவில்லை. அந்தக் காலத்தில் அரசோடு உடன்படாமல் இருந்த விசுவாசிகளும், சபைகளும் வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையில் ஊச லாடிக் கொண்டிருந்தனர். உன்னுடைய பாவத்தோடு நரகத்துக்குப் போகப் போகிறாயா? அல்லது பாவத்தை விட்டுவிலகி பரலோகம் போகப் போகி றாயா? என்ற பனியனுடைய இருதயத்தைப் பிழிந்து கொண்டிருந்த கேள்வி யின் வெளிப்பாடுதான் மோட்சப் பயணம். நூலில் கிறிஸ்தியான் நற்செய்தி யாளனிடம், “நான் இறக்க விரும்பவில்லை, கர்த்தரின் நியாயத் தீர்ப்பை சந்திக்கவும் அஞ்சுகிறேன்” என்று பனியனின் அனுபவத்தைத்தான் கூறுகி றான். நற்செய்தியாளனால் வழிகாட்டப்பட்டு மோட்சப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்ட கிறிஸ்தியான் அதை அடையும்வரை பல்வேறு துன்பங் களுக்கும், ஆபத்துக்களுக்கும் மத்தியில் உறுதியாக தன் பாதையைவிட்டு விலகாமல் கர்த்தரின் கிருபையின் மூலமாக கரை சேர்கிறான்.

மோட்சப் பயணத்தில் நாம் சந்திக்கும் மனிதர்களின் அனுபவங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய வாழ்க்கையில் சந்திப்பதுமில்லை; சந்திக்க வேண்டிய அவசியமுமில்லை. ஆனால், இந்நூலின்மூலம் நாம் மெய்க்கிறிஸ்தவன் யார்? என்பதையும், கிறிஸ்துவுக் கும், வேதத்துக்கும் கட்டுப்பட்டு வாழ்கிற கிறிஸ்தவ வாழ்க்கை யாது? என்பதையும், அறிந்துகொள்ளுகிறோம். அத்தோடு அக்கிறிஸ்தவ வாழ்க்கை பலத்த இடர்பாடுகளையும், பொறுப்புக்களையும், கடின உழைப்பையும், ஆபத்துக்களுக்கும், போலிப்போதனைகளுக்கும் எதிரான கடும்போராட்டத் தையும் உள்ளடக்கியது என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளு கிறோம். நாம் விரும்புகிறவிதமாக இலகுவாக பரலோகத்தை அடையும் பாதையாக இல்லாமல், அதிக இழப்புகளோடு கிறிஸ்துவில் காட்டும் நேசத்தையும், கடைசிவரை கிறிஸ்துவில் உறுதியாக இருக்கும் கீழ்ப் படிவையும் கொண்ட கிறிஸ்தவத்தைக் காட்டும் நூலாக இருக்கிறது பனியனின் மோட்சப் பயணம். நாம் “அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவ இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க வேண்டும்” (அப்போஸ்தலர் 14:22) என்பதை இந்நூல் விளக்குகிறது.

அத்தோடு மோட்சப் பயணம் கிறிஸ்தியானின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் எடுத்துக்காட்டுவதால் விசுவாசிகளுக்கு உற்சாகத்தை அளிக்கிறது. இதன் இரண்டு பாகங்களிலும் நாம் சந்திக்கும் பயணிகளின்

பக்திவிருத்தியின் வளர்ச்சியையும், அறிவுப் பெருக்கத்தையும், பயணத்தின் இடர்ப்பாடுகளைச் சந்திக்கும் மனப்பக்குவத்தையும், வல்லமையையும் பார்க்கிறோம். பயணிகளின் தவறுகளினால் ஏற்படும் ஆபத்துக்களின் மூலம் அநேக பாடங்களைப் படிக்க முடிந்தபோதும், தொடர்ந்து முன்னேறும் பக்திவிருத்தியான வாழ்க்கையையும், வரப்போகும் புதிய ஆபத்துக்களை யும், எதிர்ப்புகளையும் முன்னெப்போதுமில்லாத புதிய மன உறுதியோடு சந்திக்கும் அவர்களுடைய வைராக்கியத்தையும் கவனிக்காமல் இருக்க முடியாது. அதை நாம் முக்கியமாக இரண்டாம் பாகத்தில் கிறிஸ்தியா னுடயதும், கிரிஸ்டீனாவினுடையதும் குமாரர்களில் பார்க்க முடிகின்றது. அத்தோடு, கிறிஸ்தியானுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் காணப்படும் முதிர்ச்சியிலும் பார்க்க முடிகின்றது. கிறிஸ்தியானும் அவனோடு பயணம் செய்த மெய்யான பயணிகள் அனைவரும் மரண ஆற்றைக் கடந்து மோட்சப் பட்டணத்தை இறுதியில் அடைந்து மகிமையோடு இருக்கும் ராஜாவின் பிரசன்னத்தைத் தரிசித்ததை மறந்துவிடக்கூடாது.

**(3) இறுதியாக, பனியன் இந்நூலில் கிறிஸ்தவனின் தனித்துவத்தையும், அவனுடைய நட்பின் தன்மையையும், அவனுடைய சமுதாயத்தையும் அறிவுபூர்வமாக விளக்கியுள்ளார்.**

இந்நூலின் முதல் பாகம் தனி மனிதனான கிறிஸ்தியானுடைய பயணத்துக்கு மட்டுமே முத்தியத்துவமளிக்கிறது. வாசகர்களாகிய நாமும் அவனோடு உடன் பயணம் செய்து தனிப்பட்ட முறையில் அவனுடைய பயண அனுபவங்களில் இருந்து அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ளு கிறோம். ஆனால், கிறிஸ்தியானோடு நாம் மட்டும் பயணம் செய்யவில்லை. உண்மையானவனும், நன்நம்பிக்கையும் அவனோடு பயணம் செய்கிறார்கள். முக்கியமாக இரண்டாம் பாகத்தில் துணிச்சல்காரனை வழிகாட்டியாகக் கொண்டு ஒரு பெரும் கூட்டமே மோட்சப் பட்டணத்தை அடைகிறது. பனியன் ஒரு ஞானியின் திறமையோடு தனிப்பட்ட கிறிஸ்தவனின் வாழ்க்கை அனுபவங்களையும், அவனுடைய நட்பையும், சமுதாய உறவை யும் அருமையாகப் படம்பிடித்துக் காட்டி நமக்கு கிறிஸ்தவ வாழ்க்கையின் மேன்மையை விளக்குகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் மோட்சப் பட்ட ணத்தை அடைய வேண்டும். ஆனால், அவன் தான் அங்கம் வகிக்கும் கிறிஸ்தவ சமுதாயத்தோடு இணைந்து அதில் ஈடுபட வேண்டும். பலவீன மான சில வேளைகளில் கிறிஸ்தியான் தன்னுடைய நண்பர்களில் அதிகம் தங்கியிருக்க நேரிட்டது. அதேபோல் அவனுடைய நண்பர்களும் அவனில் தங்கியிருந்தார்கள். சில வேளைகளில் நண்பர்களே தவறான வழிகளையும் காட்டிவிடுகிறார்கள் (கிறிஸ்தியானே நன்நம்பிக்கையை சந்தேகக் கோட்டை க்கு வழிகாட்டினான்). ஆனால், மொத்தத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து ஆறுதல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி உதவிக்கொண்டார்கள். கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமான சக கிறிஸ்த வர்களின் துணையும், கிறிஸ்தவ நட்பின் மகத்துவத்தையும் நூல் முழுவதும் தெளிவாகப் பார்க்க முடிகின்றது. இரண்டாவது பாகம் துணிச்சல்காரனை அறிமுகப்படுத்துகிறது. அவனில் நாம் கிறிஸ்தவ இலக்கியம் படம்பிடித்துக் காட்டக்கூடிய அருமையான மெய்யான போதகனொருவனைக் காண்கி றோம். அவனுடைய வழிகாட்டுதலில் பயணிகள் தங்கள் வாழ்க்கையில்

*வளருகிறார்கள்; உயருகிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையின் குடும்ப உறவும், கிறிஸ்தவ சமுதாய உறவும் இரண்டறக் கலந்து இணைந்து பயணிக்கின்றன நூலில். கிறிஸ்தவம் மனிதன் தனிமையில் வாழ்வதற்கு வழி காட்டும் வாழ்க்கை நெறி அல்ல; திரித்துவத் தேவனோடு ஐக்கியத்தில் வந்து, அவரு க்கு விசுவாசமாக இருப்பவர்களோடு இணைந்து வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை நெறி. கிறிஸ்தவன் கர்த்தருக்கு முன்பாக வாழ்க்கின்ற தனிப்பட்ட வாழ்க்கையையும், அவன் தன்னுடைய குடும்பத்தாரோடும், நண்பர்க ளோடும், மெய்யான போதர்களைக் கொண்டு நடத்தப்படும் சபையிலும் வாழும் வாழ்க்கையை பனியனின் மோட்சப் பயணம் அழகாகவும், அறிவுபூர்வமாகவும், தெளிவாகவும் படம்பிடித்துக் காட்டுகின்றது.*

*ஜோன் பனியனின் மோட்சப் பயணத்தைப் பற்றி இதுவரை நான் தந்துள்ள சுருக்கமான விளக்கம் இந்நூலை வாசிக்கும்படி உங்களைத் துண்டியிருந்தால், உங்களுடைய ஆத்மீகப் பிரயாணத்திற்குப் பயன்படும்படி இந்தநூலை நீங்கள் கீழ்வரும் முறையில் வாசிப்பது அவசியம்:*

*1. நாம் மிகுந்த* **தாழ்மையுடன்** *வாசிக்க வேண்டும் – இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியனான பனியனை வழிநடத்தி அநேக சத்தியங்களை அவருக்கு வேதத்தில் இருந்து வெளிப்படுத்தியுள்ளார். அநேக ஆத்மீக சிறப்புமிக்க கிறிஸ்தவ ஜாம்பவான்களைக் கொண்டிருந்த பதினேழாம் நூற்றாண்டில் பனியன் பலராலும் உண்மையுள்ள போதகராகவும், வழி காட்டியாகவும் மதிக்கப்பட்டார். அத்தகையவரின் நூலை நாம் மிகத் தாழ்மையோடு வாசித்துப் பயனடைய வேண்டும்.*

*2. நாம் மிகுந்த* **கவனத்தோடு** *வாசிக்க வேண்டும் – நமக்கு இன்ப மூட்டு வதற்காகவும், சிறுவர்களுக்காகவும் பனியன் இதனை எழுதவில்லை. ஆழமான சத்தியங்களை உருவகமொழியில் அழகாகப் படம் பிடித்துக் காட்டி நமது நினைவில் நிற்க வைப்பதற்காக எழுதினார். நாம் படித்து உயருவதற்காக இது எழுதப்பட்டிருப்பதால் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்காகமிகுந்த கவனத்தோடு இதை நாம் வாசிப்பது அவசி யம். இது கதைப் புத்தகமல்ல; இது வாழ்க்கையைப் பற்றிய நூல். கர்த்தரை மகிமைப்படுத்தும் வாழ்க்கையை நாம் வாழ வழிகாட்டும் நூல்.*

*3. நூலை நாம்* **ஜெபத்தோடு** *வாசிக்க வேண்டும் – இந்நூல் ஆழமான சத்தியங்களை உள்ளடக்கியிருப்பதால் ஜெபத்தோடு நாம் நூலை வாசிக்க வேண்டும். அத்தோடு, வேதத்தைத் திறந்து வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். கற்றுக்கொள்வதற்கு அகங்காரமில்லாதவர்களுக்கு இந்நூல் கற்றுத்தர வேண்டிய சத்தியங்கள் அநேகம் உண்டு.*

*4. நூலை நாம்* **மீண்டும் மீண்டும்** *வாசிக்க வேண்டும் – ஸ்பர்ஜன் இதை நூறுதடவைகளுக்கு மேல் வாசித்திருக்கிறார் என்று அறிகிறோம். இது நமக்கு நல்ல வழிகாட்டி. நூல் முழுவதும் வேதத்தால் நிரம்பியிருப்பதால் அது நமக்கு வேத போதனையளிக்கிறது. நமது ஆத்மீகப் பயணத்திற்கும், பக்தி விருத்திக்கும் தேவையான நேரங்களிலெல்லாம் ஆலோசனை தரக்கூடியதாக இருக்கிறது. நாம் வாழ்க்கையில் எதிர்நோக்கக்கூடிய புதிய புதிய சோதனை களுக்கெல்லாம் இது தகுந்த ஆலோசனை தந்துதவும்.*

# பிரசங்கப் பேச்சு நடை, உச்சரிப்பு, குரல் வளம் . . .

இனி பிரசங்கத்தைத் தயாரிக்கும்போது பிரசங்கிகள் கவனிக்க வேண்டிய விஷயங்களை விளக்கமாக கவனித்து வந்த நாம் கடந்த இதழில் தயாரிக்கப்பட்ட பிரசங்கத்தை மேடைக்கு கொண்டு செல்லும் போது பிரசங்கக் குறிப்புகளை எந்த முறையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதைக் கவனித்தோம். ஆத்துமாக்களுக்கு ஆவிக்குரிய உணவளித்து வளர்க்க வேண்டிய உயர்ந்த ஊழியத்தில் இருக்கும் போதகர்கள், பிரசங்கிகள் வேதபூர்வமாக பிரசங்கங்களைத் தயாரித்து அளிக்க இவை உதவியாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். இவை தங்களுடைய பிரசங்க ஊழியத்துக்கு பெரிதும் உதவியிருப்பதாக எழுதித் தெரிவித்தவர்களுக்கு நன்றி. நம்முடைய பிரசங்க ஊழியத்தால் கர்த்தருக்கே அனைத்து மகிமையும் சேர வேண்டும்.

பிரசங்கங்களை நாம் வேத அடிப்படையில் கஷ்டப்பட்டு ஆராய்ந்து தயாரித்துவிடுவதோடு நமது வேலை முடிந்துவிடுவதில்லை. கடினமாக உழைத்து ஞானத்தோடு பிரசங்கங்களைத் தயாரிப்பது இன்றியமையாதது. அப்படித் தயாரித்த பிரசங்கத்தை ஆத்துமாக்களுக்கு முன் பிரசங்கிப்பது அதன் அடுத்த பகுதியாகும். பிரசங்கத்தை பிரசங்கித்து முடியும்வரை அந்தப் பணி நிறைவேறிவிட்டதாக நாம் கருத முடியாது. எத்தனைக் கருத்தோடு பிரசங்கத்தை உழைத்துத் தயாரித்தாலும் அதை ஆத்துமாக்களுக்கு முன் படைக்காதவரை அதனால் பிரயோஜனம் இருக்காது.

**பிரசங்கப் பேச்சுநடை**

பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களை இனி ஆராய்வோம். அதில் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கப் பயன்படுத்தும் பேச்சுநடை பற்றி முதலில் பார்ப்பது அவசியம். தமிழில் பிரசங்கிக்கும் பிரசங்கிகள் அந்த மொழியில் வளமாகப் பேசத் தெரிந்திருப்பது அவசியம். பிறந்தது முதல் பேசிக்கொண்டிருக்கிற மொழியில் யாருக்காவது வளமாகப் பேசத் தெரியாமல் இருக்குமா? என்று நீங்கள் கேட்கலாம். பிறந்தது முதல் நாம் தாய் மொழியில் பேசினாலும் பிரசங்கம் செய்கிறபோது அது சுலபமாக நல்ல முறையில் அமைந்து விடும் என்று நினைப்பது தவறு. இன்றைய நடைமுறைப் பேச்சுத் தமிழ் கொச்சையாக இருப்பது நமக்குத் தெரியும். அதில் இலக்கண சுத்தத்திற்கோ, அழகுணர்ச்சி நயங்களுக்கோ இடமில்லை. நாம் பேசுகின்ற மொழி பிரசங்கம் செய்வதற்கு ஏற்றவிதத்தில் அமைந்திருக்க வேண்டும். இதற்கு மொழிப்பயிற்சி அவசியம்.

மொழியில் பயிற்சி இல்லாமல் பிரசங்கத்தை அளிக்க முடியாது. இதற்காக நாம் பண்டிதர்களாகிவிட வேண்டிய அவசியமில்லை. இலக்க

ணம் முதல் மொழி பற்றிய அனைத்திலும் நல்ல பயிற்சி இருக்க வேண்டும் என்பதையே நான் வலியுறுத்துகிறேன். வளமாகப் பேசத் தெரியாத காரணத் தால் பிரசங்கி ஒரு நல்ல பிரசங்கத்தைப் பயனற்றதாக்கி விடலாம். அதை விடக் கொடுமை இருக்க முடியாது. மொழி அறிவும், மொழி வளமும் இல்லாமல் பிரசங்கம் கேட்பவர்களை சோர்வடையச் செய்கிறவர்கள் இன்று அதிகம். ஒரு சிலருடைய குரலைக் கேட்டாலே நமக்கு ஓடிவிடத் தோன்றும். அப்படியிருக்கும்போது அவர்களுடைய பிரசங்கங்களை இருந்து கேட்பதெப்படி? இன்று பிரசங்க ஊழியத்தின் இந்த விஷயத்தில் இறை யியல் கல்லூரிகளோ, சபைகளோ அக்கறை காட்டுவதில்லை. டெலிவிஷ னில் செய்தி வாசிப்பவர்களையும், பேசுகிறவர்களையும் அவர்களுடைய பேச்சுநடை, மொழிவளம் ஆகியவற்றைப் பார்த்தே இந்த உலகத்தார் தெரிவு செய்கிறார்கள். பேசுவதற்கு அவர்கள் நல்ல பயிற்சி எடுக்க வேண்டியிருக் கிறது. பிரசங்க ஊழியத்தில் இன்றைக்கு தட்டித்தடுமாறி, திக்கித் திணறி, வார்த்தைகளை உச்சரிக்கத் தெரியாதவர்கள் பெருகிக் கிடப்பது நம்மினத் தைப் பிடித்துள்ள வியாதியே.

தமிழகத்துப் பிரசங்கிகளில் பலர் பிரசங்கத்துக்கென்று தனியாக ஒரு மொழிநடையைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். பிரசங்கம் கேட்கிறவர்கள் பேசுகிறது நம் போதகர்தானா? என்று தலையை உயர்த்திப் பார்க்கும் விதத்தில் அவர்களுடைய மொழி நடை அமைந்திருக்கும். பிரசங்க மேடை க்கு வெளியில் அவர்களுடைய பேச்சு வித்தியாசமானதாக இருக்கும். 'பிரியமானவர்களே', 'அன்பானவர்களே' என்று ஆத்துமாக்களை பார்த்துப் பேசாத தமிழகத்துப் பிரசங்கிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். தமிழ் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை மிகவும் பழமையானது. இன்று அந்த மொழி நடையில் எழுதுகிறவர்களையும் பேசுகிறவர்களையும் நம்மினத்தில் பார்க்க முடியாது. பிரசங்கிகளில் பலர் இன்று அந்த மொழி நடையை பிரசங்கிக்கும்போது பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கு அவர்கள் தரும் விளக்கம் அது கர்த்தரின் பாஷையாம்! புறஜாதி மனிதன் சபைக்கு வந்தால் இந்த மொழிநடையைக் கேட்டே ஓடிவிடுவான் என்பது அநேகருக் குப் புரிவதில்லை. வழக்கமாக நாம் பேசும்போது பயன்படுத்தும் மொழி நடையை பிரசங்கிக்கும்போதும், பிரசங்க மேடையில் நிற்கும்போதும் பயன் படுத்துவது தகாது என்ற தவறான எண்ணம் எல்லாப் போதகர்களுடைய இரத்தத்திலும் ஊறிப்போயிருக்கிறது.

பிரசங்கிக்கும்போது நாம் வழக்கத்துக்கு மாறான மொழிநடையைப் பயன்படுத்தினால் ஆத்துமாக்களுக்கும் நமக்கும் இடையில் ஒரு இடை வெளி ஏற்பட்டுவிடும். பிரசங்கமும் கேட்பதற்கு செயற்கையானதாக இருக்கும். அதில் உயிரோ, உணர்ச்சியோ இருக்காது. அருமையான பிரசங் கத்தைக் கூட, மொழிநடை செயற்கையானதாக இருப்பதால் நாம் கெடுத்து விடலாம். இதற்காக நாம் வழக்கில் இருக்கும் கொச்சைத் தமிழில் பேச வேண்டுமென்று சொல்லவில்லை. பண்டிதத் தமிழ் வாடையோ அல்லது நாம் யார் என்பதை அடையாளம் காட்ட முடியாத மொழி நடையோ இருந்துவிடக்கூடாது என்றுதான் சொல்லுகிறேன். பிரசங்க மொழி நடை மக்களுடைய பாஷையில் இருக்கவேண்டுமென்பதில் ஸ்பர்ஜன் உறுதியாக

இருந்தார். சீர்திருத்தவாதிகளான மார்டின் லூதரும், கல்வினும், நொக்ஸுºம் அதற்குப் பின்வந்த ஜோர்ஜ் விட்பீல்ட் போன்றோரும் மக்களுடைய பாஷையிலேயே பேசினார்கள்.

பிரசங்கிகளுடைய பேச்சு வெளிப்படையாக இருக்க வேண்டும். ஜோடனைகள் உள்ளதாக செயற்கையாக இருக்கக்கூடாது. இதைக் குறிக்க வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை Parresia (அப்போஸ். 4:13). இதற்கு வெளிப்படையான, ஒளிவு மறைவில்லாமல், நேரடியான ஆகிய அர்த்தங்கள் உண்டு. கர்த்தர் செயற்கையான பாஷை யில் நம்மோடு பேசவில்லை. மனிதர்களுக்குப் புரிகிற பொதுவான மானிட மொழியில்தான் (Common or Vulgar language) பேசினார். இயேசு கிறிஸ்துவும் மனிதர்களுடைய அன்றாட பாஷையில் அவர்களுக்கு தெளிவாகப் புரிகிற மொழியில் பேசினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் இவ்விதமாகவே பேசியிருக்கிறார்கள். உண்மையில் அவர்களுடைய பேச்சில் கடுமையான வார்த்தைகளும், முகம் சுழிக்கக்கூடிய வார்த்தைகளும் இருந்திருக்கின்றன. தேவைப்பட்ட இடங்களில் அப்படிப் பேசுவதை அவர்கள் தவிர்க்க வில்லை. இதற்காக கீழ்த்தரமான பாஷையில் நாம் பேச வேண்டும் என்பதல்ல. தீர்க்கதரிசிகளும், இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர் களும் ஜோடனைகள் எதுவுமின்றி, தெளிவான மொழியில் குழப்பங்கள் இல்லாமல் கிராமத்தானுக்கும் புரிகிற பாஷையில் பேசினார்கள். பிரசங்கம் ஆத்துமாக்களுடைய இதயத்தில் பதிய வேண்டுமானால் நாம் பேசுகிற மொழி அவர்களுக்கு புரியக்கூடியதாக, அவர்களுடைய நெஞ்சில் பதியக்கூடியதாக இருக்க வேண்டும்.

சார்ள்ஸ் பிரிட்ஜஸ் (Charles Bridges) சொல்லுகிறார், “ஒரு மனிதனை மிகவும் படித்தவனைப்போலக் காட்டக்கூடிய மொழியில் எழுதவும், பேசவும் வைப்பது அவனுடைய மாயையே. ஆனால், பக்திவிருத்தி ஒரு அறிஞனை ஜோடனைகளில்லாத மொழியில் பொதுமக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் பேச வைக்கும்.” ஜோடனைகளில்லாமல், படிப்பறிவில்லாதவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேசுவது இலகுவான காரியமல்ல என்கிறார் பிசப் ஜே. சி. ரைல். “கஷ்டப்படாமல் இதை நாம் அடைய முடியாது. மீண்டும் சொல்லுகிறேன், வலியும், கஷ்டமும் இல்லாமல் இது வராது” என்கிறார் ரைல். இதுபற்றி ஸ்பர்ஜன் பின்வருமாறு சொன்னார், “ஆத்துமாக்களில் நமக்கிருக்கும் அன்பு நம்மைப் பலவிதங்களில் உழைக்க வைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த அன்பினால் நாம் ஆத்துமாக்களுக்குப் புரியக்கூடிய மொழியில் பேசுவோம். நம்மைப் பார்த்து நாமே இப்படிச் சொல்லிக் கொள்ளுவோம், ‘சபையில் அமர்ந்திருக்கும் அந்தப் பெண்ணால் புரிந்து கொள்ள முடியாத அந்தப் பெரிய வார்த்தையை நான் பயன்படுத்தக்கூடாது. அந்தப் பகுதியில் இருக்கும் கடினமான விஷயத்தை நான் விளக்க முயற்சிக்கக் கூடாது. என்னுடைய விளக்கம் கலங்கிப் போயிருக்கும் அந்த ஆத்துமாவைக் குழப்பத்துக்குள்ளாக்கி அமைதி ஏற்படுத்தாமல் போய்விடும்.’ . . . நீங்கள் ஆத்துமாக்களை நேசிக்கப் பழகுவீர்களானால் அதிகமான வசனங்களைப் பயன்படுத்து வதில் உங்களுக்கு ஆசை ஏற்படாது . . . நமக்கு அன்பு

இருந்தால் சகலவிதமான ஜோடனைகளையும், வருணணைகளையும் நமது பேச்சில் இருந்து களைந்து, வேதத்தின் அர்த்தத்தை மட்டும் தெளிவாக விளக்கி, ஆத்துமாக்களுக்கு நமது பேச்சு ஆசீர்வாதமாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுவோம்." ஸ்பர்ஜனின் இந்த வார்த்தைகள் பொருள் பொதிந்தவை.

ஆத்துமாக்களுக்கு புரிகிறபடி, வெளிப்படையாக, ஜோடனைகளின்றி பிரசங்கம் செய்யவேண்டுமென்று வலியுறுத்துகிறபோது அதைத் தவறாக விளங்கிக் கொள்ளாமலிருப்பதும் அவசியம். இதுவரை நாம் விளக்கிய வற்றின் மூலம் நாம் எல்லா இடங்களிலும் ஒரே முறையில் பேச வேண்டும் என்று நான் கூறவரவில்லை. கிராமத்து மக்கள் முன்னிலையில் பேசுவதற் கும், படித்த கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசுவதற்கும் பெரும் வித்தியாசம் உண்டு. எல்லா இடங்களிலுமே அநாவசியமான ஜோடனை கள் தேவையில்லை; இருந்தாலும் படித்தவர்கள் மத்தியில் பேசும்போது நமது பேச்சில் அவர்களுக்குத் தேவையான விஷய ஞானமிருப்பது அவசி யம். புரிந்துகொள்ளும்படியாகப் பேச வேண்டும் என்று நான் தந்த ஆலோ சனையை நமது பேச்சு குழந்தைத்தனமானதாக, சாராம்சமற்றதாக, விஷய மற்ற, உப்புச்சப்பில்லாத பேச்சாக இருக்க வேண்டும் என்று தப்பாக விளங் கிக் கொள்ளக்கூடாது. இன்று பெரும்பாலான தமிழினத்து பிரசங்கிகளின் பிரசங்கங்கள் பொருளற்றதாகவும், கேட்பவர்களின் ஆத்மீக தாகத்தைத் தீர்த்துவைக்க முடியாததாகவும் இருக்கிறது என்று கூறுவது இருக்கின்ற நிலைமையை மிகைப்படுத்துவதாகாது.

நாம் எவ்வளவு படித்திருந்தாலும், எத்தனை மொழிவல்லமையுடையவர் களாக இருந்தாலும் நமது பிரசங்கத்தைத் கேட்கிறவர்கள் அதைப் புரிந்துகொள்ளும்படி பிரசங்கம் இருக்க வேண்டும். அதைச் செய்வதற்காக நாம் படிக்காத முட்டாளைப் போல பேச வேண்டியதில்லை; ரிக்ஷா இழுக்கிறவர்களைப் போலவும் பேசத்தேவையில்லை. தெருப் பாஷையில் பேசவேண்டிய அவசியமில்லாமலேயே நமது பேச்சுநடை எளிமையான தாக, கேட்பவர்கள் புரிந்துகொள்ளும்படியானதாக இருக்க வேண்டும்.

## உச்சரிப்பு

பேச்சு நடையோடு நமது உச்சரிப்பும் தெளிவாக இருக்க வேண்டும். வார்த்தைகளை நாம் விழுங்கக் கூடாது. நாம் பேசுகின்ற வார்த்தைகளை ஆத்துமாக்கள் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஸ்கொத் லாந்து நாட்டவர்களின் ஆங்கில உச்சரிப்பு வித்தியாசமானதாக இருக்கும். ஸ்கொத்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பிரசங்கி ஒருமுறை ஒரு சபையில் பிரசங்கித்தார். அந்த சபையில் ஆங்கிலம் தெரிந்த சீன இனத்தைச் சேர்ந்த பலர் இருந்தனர். ஸ்கொத்லாந்துப் பிரசங்கி சபையைக் குறித்துப் பயன் படுத்திய ஆங்கில வார்த்தையான Church ஐ அவர் 'சுர்ச்' என்று உச்சரித்த விதம் ஆங்கிலம் தெரிந்த சீனர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. கூட்டம் முடிந்தபின் ஒரு சீனப் பெண் பிரசங்கியைப் பார்த்து அவர் உச்சரித்த அந்த வார்த்தை என்ன? என்று கேட்டாள். பிரசங்கம் முடியும்வரை அந்தப் பெண்ணின் மனம் அந்த வார்த்தை என்ன என்று ஆராய்வதிலேயே

செலவழிந்து பிரசங்கத்தைக் கேட்காமல் செய்துவிட்டது. இந்த விஷயத்தை அந்தப் போதகரே ஒருமுறை என்னிடம் சொன்னார். அநேகர் பேசுகிற போது எல்லா 'லகர'ங்களையும் ஒரேமாதிரியாக உச்சரிப்பார்கள். 'ற'வையும், 'ர'வையும்கூட ஒரே மாதிரியாக உச்சரிப்பார்கள். இதையெல்லாம் திருத்தி அமைத்துக் கொள்வது அவசியம்.

பிரசங்கிக்கிறபோது வார்த்தைகளையும் வசனங்களையும் உணர்ச்சியோடு பயன்படுத்த வேண்டும். வார்த்தைகள் வலிமைமிக்கது. அவற்றை அழுத்திப் பயன்படுத்த வேண்டிய நேரத்தில் அழுத்திப் பயன்படுத்தி, நிறுத்திப் பேச வேண்டிய நேரத்தில் நிறுத்திப் பேசுவது அவசியம். தங்குதடையில்லாமல் குதிரை ரேஸில் வர்ணணை கொடுப்பவரைப் போல உணர்ச்சியில்லாமல் பேசக்கூடாது. சிலர் உணர்ச்சியே இல்லாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். அது பிரசங்கத்தைப் பாழடித்துவிடும். பிரசங்கம் கேட்பவர்களையும் தூங்க வைத்துவிடும். தேவைக்கு மேலாக உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதும் பிரசங்கத்தைப் பயனில்லாமல் செய்துவிடும். அரசியல் மேடைப்பேச்சு நடை பிரசங்கத்திற்கு உதவாது. கருணாநிதியும், ஸ்டாலினும் கட்டைக் குரலில் நிறுத்தி நிறுத்திப் பேசுவது போல் பேசக்கூடாது. அவர்களுடைய பேச்சில் ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையில் இருக்கும் இடைவெளி மிகவும் அதிகம். இது பிரசங்கத்திற்கு உதவாது.

## பிரசங்கத் தொனி

பிரசங்கிகள் கவனிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய அம்சம் அவர்களுடைய குரல் வளம். பிரசங்கியின் நடத்தை, பக்திவிருத்தி ஆகியவற்றிற்கும், பிரசங்கத் தயாரிப்புக்கும் அடுத்தபடியான இடத்தையே பிரசங்கியின் பிரசங்கத் தொனி வகிக்கிறது. குரல் வளம் மட்டுமிருந்து ஒருவர் சிறந்த பிரசங்கியாகிவிட முடியாது. அதேவேளை குரல்வளத்தின் அவசியத்தை அலட்சியப்படுத்திவிடவும் முடியாது. ஒரு மெய்ப்பிரசங்கியின் வேதபூர்வமாக தயாரிக்கப்பட்ட பிரசங்கம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் பிரசங்கி தன்னுடைய குரலைத் தகுந்த முறையில் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

பிரசங்கிக்கு இருக்கும் முக்கியமான கருவி குரல். பிரசங்கி கர்த்தர் தந்திருக்கும் தன்னுடைய குரலோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் நல்லபடி பிரசங்கிப்பதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். குரலில் இருக்க வேண்டிய உயர்வு தாழ்வுகள், வேறுபாடுகள், அழுத்தங்கள், வேகம், உணர்ச்சி அத்தனையையும் பிரசங்கப் பணி சிறப்பாக இருப்பதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

பிரசங்கப் பணி சிறப்பாக அமையும் பொருட்டு பிரசங்கி தன்னுடைய குரல்வளத்தைப் பெருக்கிக் கொள்ள கீழ்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றலாம்:

### 1. தன்னுடைய குரலைப் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

மூக்கினால் பேசும் வழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். மூக்கு

பேசுவதற்காக அல்ல, மூச்சுவிடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூக்கால் பேசும் வழக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். இதற்கு வயிற்றில் இருந்து குரலை எழுப்பப் பயிற்சி செய்வது நல்லது. சிலருக்கு குரல் பெண்களுடைய குரலைப் போன்றதாக இருக்கும். அது உதவாது. பிரசங்கிகளின் குரலில் அநாவசிமான ஜோடனை இருக்கக்கூடாது. சில பிரசங்கிகள் கேட்பவர்கள் இதயத்தைக் கசியச் செய்வதுபோல் இனிப்பான குரலில் பேசுவார்கள். அது செயற்கையானது. அழுகின்ற குரலில் பேசுவதும் தகாது. தவறான விதத்தில் பேசிப்பேசிப் பழகிப் போனவர்கள் அதைத் திருத்திக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.

**2. பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கும் அனைவரும் அதைக் கேட்கும் அளவுக்கு குரலை கம்பீரமாக உயர்த்திப் பேசப் பழக வேண்டும்.**

சிலருடைய குரல் வளமானதாக இருந்தாலும் அவர்களால் குரலை உயர்த்திப் பேச முடியாமல் இருக்கும். ஆத்துமாக்களுக்கு தங்களுடைய குரல் கேட்கிறது என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அதைவிட தங்களுடைய குரல் ஆத்துமாக்களுக்குக் கேட்கிறதா என்பதை அவர்கள் அடிக்கடி விசாரித்துப் பார்த்துக்கொள்வது நல்லது. சபையில் பின்வரிசையில் இருப்பவர்களுக்கு முன்வரிசையில் இருப்பவர்களுக்குக் கேட்பதைப்போலவே பிரசங்கம் கேட்க வேண்டும். சிலர் நன்றாக குரலை உயர்த்தி பிரசங்கத்தை ஆரம்பித்துவிட்டு பிற்பாடு பாதியில் குரலை அடக்கிக் கொள்வார்கள். இத்தகைய குறை உள்ளவர்கள் தங்களுடைய குரல் சாதாரணமாக மற்றவர்களுக்கு கேட்பதில்லை என்பதை நினைவில் வைத்து எப்போதும் குரலை உயர்த்திப் பேசுவதற்கு பயிற்சி எடுக்க வேண்டும். வாய்க்குள்ளேயே வைத்து வார்த்தைகளை மென்றுவிடுகிறவர்கள் பிரசங்க ஊழியத்துக்கு வருவதால் எந்தப் பயனுமில்லை. ஆரம்பத்திலேயே இதை சரிப்படுத்திக்கொள்ளாவிட்டால் போகப் போக பிரசங்க ஊழியத்தில் அவர்களால் வளர முடியாது.

சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய சாரீரத்தை நல்ல முறையில் பயன்படுத்தப் பயிற்சி எடுப்பார்கள். ஆற்றிலோ, குளத்திலோ இருந்து பாடிப் பயிற்சி எடுப்பார்கள். அது அவர்கள் குரலை வளமாகப் பயன்படுத்துவதற்கு உதவுகிறது. அதுபோல பிரசங்கி தன்னுடைய குரலில் கவனத்தை செலுத்துவது அவசியம். குரலை உயர்த்தி எல்லோருக்கும் கேட்கும்படியாகப் பேசுவது அவசியமானாலும், அநாவசியமாக குரலை தேவைக்கு மேலாக உயர்த்தி கேட்பவர்கள் காதுகளைக் கிழித்துவிடக் கூடாது.

**3. குரலில் தேவையான உயர்வு தாழ்வுகளும், வேறுபாடுகளும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.**

பிரசங்கத்தை ஆரம்பித்து முடிக்கும்வரை பிரசங்கியின் குரல் ஒரே அளவில் தொடர்ந்து இருக்குமானால் கேட்பவர்கள் சலிப்படைந்து போவார்கள். எந்த இடத்தில் குரலை உயர்த்த வேண்டும், தாழ்த்த வேண்டும், நிறுத்திப் பேச வேண்டும் என்பது பிரசங்கிக்கு தெரிந்திருக்க வேண்டும். உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்களை எப்படி

உச்சரித்துப் பயன்படுத்த வேண்டும் என்பதில் பிரசங்கி அதிக கவனம் எடுக்க வேண்டும். தன்னுடைய நாவையும், பற்களையும், தொண்டையையும், வயிற்றையும் அக்கறையுடன் தன்னுடைய குரல் வளத்திற்கு பொருத்தமானவிதத்தில் பயிற்சிசெய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தீமோத்தேயுவுக்கு வயிறு சரியில்லாமலிருந்தபோது அதைக் குணப்படுத்திக் கொள்வதற்கு திராட்சை இரசத்தை அருந்தும்படிப் பவுல் கூறியதற்கு பிரசங்கியான தீமோத்தேயுவின் வயிற்றுக்கும், குரலுக்கும், பிரசங்கம் செய்வதற்கும் இருந்த பெருந்தொடர்புகூடக் காரணமாக இருந்திருக்கலாம்.

### மேடை பாவனை

இனி பிரசங்க மேடையில் பிரசங்கி நின்று பிரசங்கிக்க வேண்டிய விதத்தைப் பற்றியும் சில ஆலோசனைகளை சொல்ல விரும்புகிறேன். நாம் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களின் கண்கள் நம்மீது பதிந்திருக்கின்றன. நமது பிரசங்கத்தை ஆத்துமாக்கள் கேட்கிறபோது நமது பிரசங்க மேடை செயல்முறைகள் அவர்களுடைய கவனத்தை எந்தவிதத்திலும் பாதித்துவிடுவதாக அமையக்கூடாது. பிரசங்கத்தை ஆரம்பித்து அது முடிகிறவரை ஆவியானவரின் கிரியைக்குத் தடையாக எதுவும் இருப்பதற்கு இடந்தரலாகாது.

தமிழகத்து பிரசங்கிகளில் பலர் கண்களை மூடிக் கொண்டு பிரசங்கம் செய்யும் வழக்கத்தை நான் கவனித்திருக்கிறேன். இப்படி ஏன் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. அது பக்தியைக் குறிப்பதாக இருக்கிறது என்று நினைக்கிறார்களோ என்னவோ. கண்களை மூடிக் கொண்டு பேசுவது மிகவும் தவறான செயல். ஆத்துமாக்களின் கண்களைப் பார்த்து பிரசங்கிக்க முடியாதவர்கள் மெய்ப்பிரசங்கிகள் அல்ல. உத்தமமான இருதயத்தைக் கொண்டிராதவர்கள் மட்டுமே கண்களை மூடிக்கொண்டு பிரசங்கிப்பார்கள்; பேசுவார்கள். மெய்ப்பிரசங்கிகளுக்கு இது தகாது. ஜெபிக்கும்போது மட்டுமே கண்கள் மூடி இருக்க வேண்டும். பேசும்போது கண்கள் திறந்திருக்க வேண்டும்.

பிரசங்க மேடையில் நிற்கும்போது ஒரு காலில் நின்று பிரசங்கிக்கும் சிலரையும் பார்த்திருக்கிறேன். இரண்டு கால்களிலும் நின்று நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிறவனாக பிரசங்கி இருக்க வேண்டும். ஒரு காலில் நின்றோ அல்லது பிரசங்க மேடையில் ஒரு பக்கம் சாய்ந்து நின்றோ அல்லது கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டோ, கூரையைப் பார்த்துக் கொண்டோ பேசுவது மிகவும் தவறு. இதெல்லாம் பிரசங்கம் செய்வதற்கு உதவாத செயல்முறைகள்.

பிரசங்கம் செய்யும்போது ஒரே இடத்தில் நின்று அசையாமல் கூட்டத்தில் ஒருபகுதியினரை மட்டும் பார்த்து பிரசங்கிக்கக்கூடாது. கூட்டத்தின் சகல பக்கமும் நமது கண்கள் திரும்ப வேண்டும். அதற்கேற்ப உடலசைவும் இருக்க வேணடும். பிரசங்க மேடையில் உணர்ச்சியற்ற கட்டைபோல இயங்காமல், இயந்திரம் போல் செயல்படாமல், உணர்ச்சியோடும், கம்பீரத்தோடும், வேத அதிகாரத்தோடும் பிரசங்கி இயங்க வேண்டும்.

# எண்ணங்கள்!

நான் கடந்த வருடம் 2004 மார்ச் மாதத்தில் தான் தங்களுடைய பத்திரிகையை ஒருவர் மூலமாக படிக்க நேர்ந்தது. முதலில் படிப்பதற்கு சற்று மனதில்லாமல்தான் படித்தேன். தொடர்ந்து படிக்கப் படிக்கத்தான் தேவனின் விலையேறப்பெற்ற பொக்கிஷங்கள் அதில் இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டேன். எனக்கு ஏறக்குறைய 15 கிறிஸ்தவ பத்திரிகைகள் வருகின்றன. அவற்றில் ஒன்றில்கூட இப்படிப்பட்ட சத்தியங்கள், அதாவது சத்தியத்தை சத்தியமாக விளங்க வைக்கின்ற காரியங்கள் இல்லை. தங்களுடைய பிரசங்கம் தயாரித்தல் ஆக்கம் எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது.

'டிஸ்பென்சேஷனலிசம்' என்ற கோட்பாட்டைப் பற்றி உங்களுடைய இதழ் மூலமே தெரிந்து கொண்டேன். இதற்கு முன் இந்த வார்த்தையைக் கூட நான் கேள்விப்பட்டதில்லை. தங்களின் புதிய புதிய செய்திகள் மிகவும் அருமை. தேவன் இத்தனை ஞானத்தைக் கொடுத்து தங்களை உபயோகப்படுத்துவதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இன்றைய கிறிஸ்தவம் ஒரு வியாபாரமாக மாறிவிட்ட காலத்தில் தங்களின் செய்திகள் அப்படிப்பட்ட மக்களுக்கு எச்சரிக்கையாக இருக்கிறது. தேவன் தாமே உங்களை பெலப்படுத்தி இன்னும் புதிய முறைகளில் பயன்படுத்துவாராக.

***– எஸ். ஜோன் கிரிஸ்டோபர், தமிழ்நாடு***

உங்களுடைய சீர்திருத்த பத்திரிகைக்கு நன்றி! தேவன் இதன் மூலம் பெயரளவில் கிறிஸ்தவர்களாக தங்களைக் காட்டிக் கொள்ளும் அநேகருடைய கண்களைத் திறக்கட்டும். ஆசிரியருடைய இலக்கியப் பணிக்கும், இந்த 21ம் நூற்றாண்டில் தைரியமுள்ள சீர்திருத்தவாதியாக அவர் செயல்பட்டு வருகிறதற்காகவும் என்னுடைய வாழ்த்துக்கள். தமிழினத்தையும் சபைகளையும் உணர்ச்சிகளுக்கு மட்டும் உணவளித்து சீரழித்து வரும் கெரிஸ்மெடிக் இயக்கத்தின் கரத்தில் பாப்திஸ்து சபைகள்கூட விழுந்திருக்கின்ற இந்த காலகட்டத்தில் சீர்திருத்தம் நிச்சயம் அவசியம். உங்கள் கரத்தைக் கர்த்தர் பலப்படுத்துவாராக.

***– அருள் தேவநேசன், தமிழ்நாடு***

அன்றாட வாழ்க்கைக்கு திருமறைத்தீபம்
அருளுரை நெறிபுகட்டும் திருமறைத்தீபம்
முறையற்ற ஊழியத்தை திருமறைத்தீபம்
முன்னறிந்து உணர்த்திடும் திருமறைத்தீபம்

போலிகளைச் சாடிவரும் திருமறைத்தீபம்
புகழுரைக்கு மயங்காத திருமறைத்தீபம்
பகட்டான ஊழியத்தைத் திருமறைத்தீபம்
பகடிசெய்து தோலுரிக்கும் திருமறைத்தீபம்

பண்பாட்டுச் சீரழிவைத் திருமறைத்தீபம்
அன்பாலே கடிந்துகொள்ளும் திருமறைத்தீபம்
பத்தாண்டு கடந்துவந்த திருமறைத்தீபம்
பல்லாண்டு வளரவேண்டும் திருமறைத்தீபம்

***– டீ. ஸ்டீபன் நடராஜன், தமிழ்நாடு***

## சீர்திருத்தவாதம்!

சபையில் சீராக இல்லாத அனைத்தையும்
சீராக்குவது என்பது அதற்குப் பொருள்

வரலாற்றில் அது பெற்றது வார்த்தைகளால்
விவரிக்க முடியாததொரு இடத்தை

வேதத்தை நாமின்று நம் மொழியில் வாசிக்க
வழி ஏற்படுத்தித் தந்ததே அதுதான்

அதை ஈன்றெடுத்தோர் பட்ட துன்பங்கள்
ஒன்றா இரண்டா அதைப் பெற்றெடுக்க?

உறக்கத்திலும் விழித்திருக்கையிலும்
ரோமப் போப்பை அது அலறவைத்தது

கத்தோலிக்க மதத்தின் கடையாணியைப்
பிடுங்கி அதன் கால்களை ஒடித்தது

வேத விரோதக் கோட்பாடுகளையும்
சம்பிரதாயங்களையும்
சூறாவளியாக சுழன்று தாக்கியது

போப்பின் அடிவருடிகளையும், அரசையும்
அஞ்சி அஞ்சி அலரச் செய்தது

தொடர்ந்து அதன் வழியில் நாம்
இன்பப் பயணம் செய்யத் தூண்டும்
பதினாறாம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதம்

## சாதிப் பித்து!

பாரதி பாடிச் சபித்து
அம்பேத்கர் அறவே வெறுத்து
காந்தி காரித் துப்பி
இயேசு இல்லாமலாக்கிய
இதயமற்ற சாதிப்பித்து
இருபத்தியோராம் நூற்றாண்டில்
நாட்டுக்கு ஒளியூட்டி
நல்வழி காட்ட வேண்டிய
நற்செய்தி சபைகளில்
நர்த்தன மாடுவதெப்படி?

சுபி. .



ஆசிரியர் எழுதிய, மொழிபெயர்த்துள்ள, நூல்கள்:

திருச்சபை சீர்திருத்தம்
இந்திய வேதங்களில் இயேசுவா?
போல் யொங்கி சோவின் நான்காவது பரிமாணம்
1689 விசுவாச அறிக்கை
சிறுவர்களுக்கான வேத உபதேசம்
பரிசுத்த வேதாகமம்
சீர்திருத்த விசுவாசம்
ஏன் பிரசங்கம்!
வியாக்கியான பிரசங்கம்
வேதாகமத்தை விளங்கிக் கொள்வதெப்படி
சுவிசேஷ இயக்கமும், புதிய சுவிசேஷ இயக்கமும்
குடும்ப ஆராதனை
கிறிஸ்தவ இறையியல்
தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜிம் அடம்ஸ்)
யார் கிறிஸ்தவன் (அல்பர்ட் என். மார்டின்)
உப்பு தன் சாரத்தை இழந்தால் (மொரிஸ் ரொபட்ஸ்)